# பிறதுறை விருப்பப்பாடம்
# தமிழ் இலக்கிய வரலாறு II

அலகு 4

தொல்லியலும் கல்வெட்டும்

சுவடியியல்

நாட்டுப்புறவியல்

இதழியல்

வானொலி

தொலைக்காட்சி

திரைப்படம்

சொல்லத்தகுந்த துறைகள்

என்பதும் நினைத்தற்குரியது.

## 11. தொல்லியலும் கல்வெட்டும்

பண்டைய தமிழகத்தின் வரலாற்று நிகழ்வுகளையும் மக்களின் வாழ்வியல் பண்பாட்டியல் கூறுகளையும், சமூக அமைப்பு முறைகளை யும் அறிந்து கொள்வதற்குத் துணை புரிவன தொல்லியல் ஆய்வும் கல்வெட்டியல் ஆய்வும் ஆகும். தமிழகத்தொல்பொருள் துறை ஆண்டு தோறும் கோடைப்பயிற்சி வகுப்புகள் நடத்தி இவ்வாய்ப்புகளை ஊக்கு

Scanned by CamScanner

விக்கிறது. தடம் பதித்தவர்கள் வெள்ளையாம்பட்டு சுந்தரத்தின் கல்வெட்டு ஓர் அறிமுகம். கல்வெட்டியியல், கல்சொல்லும் கதைகள், நடன காசிநாதனின் காலச்சுவடுகள். தொல்லியல் முறைகள், ஆ.வேலுப் பிள்ளையின் சாசனமும் தமிழும் போன்றன இத்துறை சார்ந்த படைப்புகள்.

முதன்மையான மூவர் இத்துறையில் சதாசிவப் பண்டாரத்தார், சுந்தரேச வாண்டையார், இராசமாணிக்கனார் மூவரும் முதன்மை யானவர்களாக விளங்குகின்றனர்.

சதாசிவப் பண்டாரத்தார் வரலாற்றியலிலும் கல்வெட்டியலிலும் சாதனைகள் புரிந்தவர். கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மைகள், பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு, முதற்குலோத்துங்கன்,சோழர் வரலாறு மூன்று பகுதிகள், செம்பியன் மாதேவி போன்ற வரலாற்று நூல்களைத் தந்தவர். தன்னுடைய ஆய்வுகளால் சில வரலாற்று உண்மைகளை நிறுவியவர்.

சுந்தரேச வாண்டையார் தமிழாசிரியராக இருந்து கல்வெட்டியலில் தேர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். திருக்கொட்டையூர் கோடீச்சுரத்தல மான்மியம், திரு உசாத்தானக் கல்லெழுத்துக்கள், கல்வெட்டு, முப்பது கல்வெட்டுக்கள் போன்ற படைப்புகளைத் தந்த அறிஞர்.

மா.இராசமாணிக்கனார் பண்டாரத்தாரைப் போலவே வரலாற்றி லும் கல்வெட்டிலும் கவனம் செலுத்தியவர். புதுவையை அடுத்த அரிக்கமேடு, திருபுவனை, வல்லம் போன்ற இடங்களில் அகழ்வாய்வு செய்தவர். மொகஞ்சதாரோ, பல்லவர் வரலாறு, இரண்டாம் குலோத் துங்கன், திருக்கோயில் கல்வெட்டுக்கள், கல்வெட்டுக்களில் அரசியல், சமயம், சமுதாயம் போன்ற நூல்களைத் தந்த ஆராய்ச்சிக் கலைஞர்.

கல்வெட்டியியல் அறிஞர்கள் மேற்சுட்டிய மூவர் மட்டுமன்றி தி.நா.சுப்ரமணியன், தி.நா.இராமச்சந்திரன், கே.ஜி.கிருஷ்ணன், ஐராவதம் மகாதேவன், கே.வி.ராமன், இரா.நாகசாமி, பூங்குன்றன், செ.இராசு, குடந்தை என்.சேதுராமன், இரா.கலைக்கோவன் போன்றோரின் பணிகளும் குறிப்பிடத்தக்கன.

தி.நா.சுப்ரமணியன் தமிழ்நாட்டுத் தொல்லியல் கல்வெட்டியியல் துறை முன்னோடியாகத் திகழ்ந்தவர். தென்னிந்திய கோயிற் கல்வெட்டுக் கள் மூன்று பகுதி, பல்லவர் செப்பேடுகள் முப்பது, பாண்டியர் செப்பேடுகள் பத்து போன்ற நூல்களைப் பதிப்பித்த சிறப்பிற்குரியவர்.

Scanned by CamScanner

தி.நா.இராமச்சந்திரன் தமிழ் நாட்டுத் தொல்லியல் முன்னோடி தமிழ்நாடு தொல்பொருள் துறையினைத் தோற்றுவித்த பெருமைக் குரியவர்.

கே.ஜி.கிருஷ்ணன் இந்தியாவில் புகழ்மிக்க கல்வெட்டாய்வாளர். இந்தியக் கல்வெட்டுத் துறையின் தென்னகக் கிளையின் தலைமைக் கல்வெட்டறிஞர் Architectual Terms in South Indian Inscriptions, South Indian Inscriptions, Annual Report on Indian Epigraphy போல்வன இவர் தந்த சிறந்த நூல்களாகும்.

ஐராவதம் மகாதேவன் ஆறு நாட்டான் மலைக் கல்வெட்டினை முதன் முதல் படித்து விளக்கியவர். தமிழ்நாட்டில் பிராமி எழுத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்து Carpus of Tamil Brahmi Inscriptions என்ற நூல் படைத்தவர்.

கே.வி.ராமன் சென்னை பல்கலைக் கழகத் தொல்லியல் துறைத் தலைவராக விளங்கியவர். பாண்டியர் வரலாறு, தொல்லியல் ஆய்வுகள் போன்ற நூல்களைத் தந்தவர்.

இரா.நாகசாமி கல்வெட்டு எனும் காலாண்டு இதழின் ஆசிரியராக இருந்தவர். கொற்கை, பல்லவமேடு, கங்கை கொண்ட சோழபுரம், வசவ சமுத்திரம், கருவூர் போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சி நிகழ்த்தியவர். முதுகலையில் கல்வெட்டு, தொல் பொருளைப் பாடமாக்கியவர் 'மக்களின் தொல்பொருள் வல்லுநர்' எனப் பாராட்டப் பெறுகிறார். கன்னியாகுமரி, செங்கம், திருத்துறைப்பூண்டி, தஞ்சை கோயில் கல்வெட்டுக்களைப் பதிப்பில் கொண்டு வந்தவர். கல்லும் சொல்லும், கலைச்செல்வங்கள், கங்கைகொண்ட சோழபுரம், மாமல்லை போன்ற நூல்கள் இவர் இயற்றியவை.

பூங்குன்றன் இயற்பெயர் அ.இராசேந்திரன் தமிழ்நாடு தொல் பொருள் துறையின் கல்வெட்டாய்வாளர். பராந்தகன் காலத்துக் கல்வெட்டையும் வட்டெழுத்து தமிழ்க் கல்லெழுத்துக்களையும் அடையாளம் காட்டியவர்.

செ.இராசு செப்பேடு, சுவடிகளில் உள்ள இருபது வரலாற்றுப் பட்டயங்களைப் பதிப்பித்துள்ளார். 500 கல்வெட்டுக்களைப் படி எடுத்துள்ளார். சைவ மடங்களில் உள்ள செப்பேடுகள் அனைத்தையும் படிஎடுத்தவர். மறைந்துபோன, மறைந்து வரும் கல்வெட்டுச் செய்திகளை வெளியிடுவதில் ஆர்வமுடையவர். கல்வெட்டுக்களைப் படித்து வரலாறு

Scanned by CamScanner

படைப்பதில் தலையானவர். கல்வெட்டும் தமிழர் பண்பாடும், என்னும் எழுத்தும் போல்வன இவருடைய நூல்கள்.

குடந்தை என்.சேதுராமன் சிறந்த செல்வந்தராக இருப்பினும் கால ஆய்விலும் கல்வெட்டாய்விலும் தன்னை வசப்படுத்திக் கொண்ட ஆர்வலர். இத்துறையில் இவருடைய பணி என்றும் நினைத்தற்குரியது. இவரது பணியை இந்திய அரசு பாராட்டியிருக்கிறது. அருளுடைய சோழ மண்டலம். The Cholas, The Early Cholas, The imperial Pandyas, Medieval Pandyas போன்ற நூல்களையும் தந்தவர். கல்வெட்டியியல் தொடர்பாகப் பல்கலைக் கழகங்கள் நடத்திய பெரும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

இரா.கலைக்கோவன் மா.இராசமாணிக்கனாரின் புதல்வர். மருத்துவப் பணியாற்றுவதோடு இத்துறையிலும் சிறப்புற்று விளங்கு கிறார். பல புதிய கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்துத் தமிழக வரலாற்றுக் கருவூலங்களை இன்றும் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வருகின்றார்.

இதழ்களின் கல்வெட்டியியல் பணி அறிஞர்களின் பெருமுயற்சி யால் கண்டெடுக்கப்படும் அரிய கல்வெட்டுக்களை இதழ்கள் சிறப்பாக அடையாளப்படுத்தி வருகின்றன. தினமணி இப்பணியை அர்த்தமுடன் செய்து கட்டுரைகளாக வெளியிட்டு வருகின்றது.

கல்வெட்டுத் தொடர்பான பிற செய்திகள் கல்வெட்டின் தொடக் கத்தையும், காலத்தால் முற்பட்ட கல்வெட்டுக்களைப் பற்றியும், கல்வெட்டின் வகைகளைப் பற்றியும் சுருங்கக் கூறுவது ஏற்புடையதாக அமையும்.

கல்வெட்டின் தொடக்கம் மிகப்பழங்காலம் தொட்டே கல்வெட்டுக் கள் வழக்கில் இருந்தன என்பதற்குத் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் சான்றுகள் கிடைக்கின்றன. நடுகல் பற்றிய செய்திகள் சங்க கால மக்களின் வீரப் பண்புகளை அறிந்து கொள்ளத் துணை செய்வன. இத்தகைய நடுகல் எடுத்த வழக்கமே தமிழ்நாட்டில் தோன்றிய முதன்மையான கல்வெட்டு அமைப்பு முறையாகும்.

காலத்தால் முற்பட்ட கல்வெட்டுக்கள் சமண பௌத்த துறவிகள் தங்கி உறைந்த இடங்கள் பல. உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த இடங்கள் பல. அங்கு அவர்களுடைய மாணவர்கள் அத்துறவிகளின் சிறப்புகளைக் கல்லில் பொறித்து வைத்தனர். அத்தகைய முதன்மையான செய்திக் கல்வெட்டுக்கள் மலைப்பாறைகளிலும், குன்றுகளிலும் குகைகளிலும் காணப்பெறுகின்றன. துறவிகள் உறைந்த இடங்கள் பள்ளி,

Scanned by CamScanner

பாழி, அதிட்டானம் என அழைக்கப் பெறுகின்றன. உயிர் நீத்த இடங்கள் நீச்சீதிகை எனப் பெயர் பெறும். கழுகுமலையிலும், ஆனைமலையிலும், திருப்பரங்குன்றத்திலும், மாங்குளத்திலும், விக்கிரமங்கலத்திலும், புகளூர்க் குன்றிலும், சித்தன்னவாசலிலும் காணப்பெறுகின்றன. இவை தமிழி என்னும் எழுத்து முறையில் பொறிக்கப் பெற்ற காலத்தால் முற்பட்ட கல்வெட்டுக்களாகும். இவை அனைத்தும் சொற்சுருக்கமும், பொருட்செறிவும் உடையனவாகும்.

கல்வெட்டின் வளர்ச்சி தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்கள் செய்த கலைப்பணியின் விளைவாகவும் கல்வெட்டுக்கள் தோன்றின. கோவில்களுக்குச் செய்த திருப்பணிகளைக் கல்வெட்டுகளாகப் பொறித்து வைத்தனர். கோவில்கள் சமயச்சார்புடையனவாக விளங்கிப் பக்தி நெறியை மட்டும் பரப்பவில்லை. பண்டைய மக்களின் வாழ்வியலைப் பேசும் கருவூலங்களாகவும் விளங்குகின்றன. மெய்க் கீர்த்திகள் என்ற பெயரில் அரசர்களின் வீரத்தையும் வெற்றிச் சிறப்பையும் கல்வெட்டுக்கள் பேசுகின்றன.

கல்வெட்டின் வகைகள் கல்வெட்டுகள் உணர்த்தும் செய்திகளைக் கொண்டு ஐந்து வகைகளாகப் பகுக்கலாம்.

- இலக்கியக் கல்வெட்டுக்கள்
- வரலாற்றுக் கல்வெட்டுக்கள்
- சமயத் தொடர்புடைய கல்வெட்டுக்கள்
- கொடை நிகழ்வைக் கூறும் கல்வெட்டுக்கள்
- வாழ்வியலைக் கூறும் கல்வெட்டுகள்

கல்வெட்டுகளின் அமைப்பு கல்வெட்டுக்கள் ஒவ்வொன்றையும் அவற்றின் அமைப்பு; முறையையொட்டி ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன.

**மங்கலச் சொல்** - கல்வெட்டின் முதல் பகுதி வாழ்த்துப் பகுதி போன்று அமையும்.

**கல்வெட்டுச் காலம்**- அரசனுடைய ஆட்சி ஆண்டைத் தெரிவிக்கும் பகுதி.

**கல்வெட்டுச் செய்தி** - ஆட்சி முறை, நிபந்தம், அரசனின் சிறப்பு முதலான செய்திகளைச் சொல்லும் பகுதி.

**கையொப்பப் பகுதி** - கல்வெட்டை அமைக்கக் காரணமானவரின் பெயரும் கல்வெட்டைப் பொறித்தவரின் பெயரும்.

Scanned by CamScanner

**ஓம்படைக் கிளவி** - அறிவுரைகள் இடம் பெறும் பகுதி.

பழந்தமிழர் வரலாற்றையும், பழக்க வழக்கத்தையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வாழ்வியல் நெறிகளையும் தெரிந்து கொள்ளத் தொல்லியல் ஆய்வுகளும், கல்வெட்டியல் ஆய்வுகளும் பெரிதும் துணை புரிந்துள்ளன. இத்துறை ஆய்வு இன்னும் முழுவீச்சுடன் நடைபெற்றால் பல புதிய உண்மைகளை அறியலாம்.

## 12. சுவடியியல்

சுவடிகளைச் சேகரித்து அதன் பொருளுணர்ந்து பதிப்பிப்பது அரிய செயல் மட்டுமன்று தனிப்பெரும் கலை. 1875வரை தமிழ் நூல்கள் பெரும்பாலும் ஓலைகளில் தான் எழுதப்பெற்றன. அச்சாக்க வசதியும் வாய்ப்பும் இல்லாத சூழலில் முன்னோர்கள் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்யச் சுவடியைப் பயன்படுத்தினர்.

**கற்றுச்சொல்லிகள்**

ஏடு எழுதும் பொழுதும் படிகள் எடுக்கும்போதும் ஆசிரியர் சொல்ல மூன்று நான்கு பேர் எழுதுவர். இவர்கள் கற்றுச் சொல்லிகள், கத்துக்குட்டிகள் என அழைக்கப்பட்டனர். எழுதுபவர்கள் வல்லின மெல்லின வேறுபாடுகள் சரிவரத் தெரியாது படி எடுப்பார்கள். எனவே பிழைகள் மிகுந்திருக்கும். அச்சில் வராமல் ஏட்டுச் சுவடிகளாக இருக்கும் நூல்களை அச்சேற்றும் பணியும், சுவடிகளைப் பாதுகாக்கும் பணியும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுவடிகளைப் படித்துப் பொருள் புரிந்து கொள்வோர் மிகச் சிலரே ஆவர். மு.அருணாசலம், மு.சண்முகம் பிள்ளை, மு.கோ.ராமன் போன்றோர் இப்பணியில் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

**சுவடி படி எடுப்புச் சிக்கல்கள்**

சுவடிகளைப் படி எடுக்கும் பொழுது ஏற்படும் பல பாட பேதங்கள், இடைச் செருகல்கள் போன்றவற்றை உணரவேண்டும். குறியீடுகள் எதுவுமின்றி நீண்ட வாக்கியங்களாக நிறுத்தப் புள்ளிகள் இல்லாமல் இருக்கும். குறில், நெடில், கொம்பு, சுழி வேறுபாடு இருக்காது.

இத்தகைய இடர்களைச் சந்தித்துப் பொறுமையுடன் தகவல்களைச் சேகரிக்கப் புலமையும், தேர்ச்சியும் வேண்டும். இச்சிக்கலைப் போக்க உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979ஆம் ஆண்டு முதல் 'சுவடி இயல்'

Scanned by CamScanner

எனும் பிரிவினைத் தொடங்கிப் பயிற்சியளித்து வருகிறது. சுவடிகளைப் படிப்பதிலும், பதிப்பிப்பதிலும் உள்ள இன்னல்கள் பற்றி உ.வே. சாமிநாதையர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

### சுவடியியல் முன்னோடிகள்

சமயப் பூசல்களாலும் காழ்ப்புணர்ச்சியாலும், மூட நம்பிக்கையாலும், ஆட்சி மாற்றத்தாலும் இயற்கைச் சீற்றத்தாலும், பூச்சிகளின் தொல்லைகளாலும் அழிந்து போன தமிழ்ச்சுவடிகள் பல. அழியும் நிலையில் இருப்பவை பல. இதனை உணர்ந்து சுவடிகளைக் காக்க முனைந்த அறிஞர்களின் பணி பாராட்டத்தக்கது. சிலர் சுவடிகளைப் பாதுகாக்க ஆர்வம் காட்டினர். சிலர் சுவடியியல் தொடர்பான நூல்களைப் படைத்துப் பேணும் முறையை விளக்கினர்.

இத்துறைக்கு முன்னோடியாக மு.கோ.ராமன் படி எடுக்கும் போதும் பதிப்பிக்கும் போதும் ஏற்படும் சிக்கல்களைப் பத்து தலைப்புகளில் 'தமிழ் சுவடியியல் அறிமுகம்' என்ற நூலாகத் தந்தார். இந்நூல் சுவடியியல் பயிற்சிக் கையேடாக விளங்குகின்றது.

இரா. நிர்மலாதேவி திருவனந்தபுரத்து 1091 சுவடிகள் பற்றிய செய்திகளைச் சேகரித்து 'தமிழ்ச்சுவடிகள் அட்டவணை' என்ற நூலாகத் தந்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகம் கணிப்பொறி கொண்டு அனைத்து உலகத் தமிழ் ஓலைச்சுவடிகள் பட்டியலை உருவாக்கியுள்ளது.

## சுவடியியல் ஆய்வு அறிஞர்கள்

### சு. சௌந்தரபாண்டியன்

கீழ்த்திசைச் சுவடி நூலகக் கிறித்துவத் தமிழ் இலக்கியச் சுவடிகள் என்பது இவருடைய முனைவர்பட்ட ஆய்வுத் தலைப்பாகும். பல இலக்கிய நூல்களையும் தந்தவர். சுவடிகளை ஆராய்ந்து சில உண்மைகளை முன் வைத்தவர். சுசீல்வள்ளல் அம்மானைச் சுவடியை அச்சிற் கொணர்ந்தவர்.

- ஓலையில் புள்ளியிட்டால் ஓலை கிழிந்துவிடும் என்ற கருத்து தவறானது எனக் காட்டினர்.
- தமிழ்க்கல்வெட்டுக்கும், சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத் திற்கும் உள்ள உறவைக் காட்டினார்.
- குறளுக்கு வீரமாமுனிவர் உரை எழுதியுள்ளார் என்பதை உணர்த்திப் பதிப்பித்தார்.

Scanned by CamScanner

**சொக்கலிங்க சுவாமிகள்**

தஞ்சை சரசுவதி மகால் நூலகச் சுவடிகளை ஆராய்ந்து பட்டியலிட்டுப் பல நூல்களைப் பதிப்பித்த சிறப்பிற்குரியவர். ஆத்திகுடி புராணம், வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி போன்ற நூல்கள் இவரால் சுவடிகளில் இருந்து அச்சாக்கம் பெற்றன.

**மு. சண்முகம் பிள்ளை**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓலைச்சுவடித்துறை சிறப்பு நிலைப் பேராசிரியராக இருந்தவர். ஓலைச்சுவடியில் இருந்த செழியதரையன் பிரபந்தங்கள், பாரதிதீபம் போன்ற நூல்களை அச்சாக்கியவர்.

**ப.வே. நாகராஜன்**

தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் ஓலைச்சுவடித் துறையில் பணியாற்றியவர். சுவடிகளில் இருந்த இலக்கியங்கள் பலவற்றைச் சிறப்பாக அச்சாக்கம் செய்தவர்.

**த.கோ. பரமசிவம்**

தமிழ்ப்பல்கலைக் கழக நூல் வெளியீட்டுப் பிரிவின் வாயிலாகச் சுவடிகளின் அட்டவணைகளைப் பல பகுதிகளாக வெளியிட்டு வருகிறார். தமிழ்ப்பல்கலைக்கழக சுவடிப்புலத்தலைவராக விளங்கி யவர்.

**மு. அருணாச்சலம்**

கால அடிப்படையில் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொகுத்த இவர் சுவடியில் இருந்த சேயூர் முருகன் உலா, பொய்யாமொழி ஈசர் குறவஞ்சி, பிரபந்த மரபியல் முதலான பல நூல்களை அச்சேற்றியவர்.

**ச.வே.சுப்பிரமணியன்**

உலகத் தமிழாராய்ச்சி இயக்குநராகப் பணியாற்றியவர். குவலயானந்தம், கூவநூல், பிரபந்ததீபம் முதலான நூல்களைச் சுவடியில் இருந்து தமிழுக்குத் தந்தவர்.

**இன்னும் பலர்**

மு.இராகவையங்கார், வையாபுரிப் பிள்ளை, ஏ.என்.பெருமாள், தா.வே.வீராசாமி, ச.பவானந்தம் பிள்ளை, அ.தாமேதரன் போன்றோரும் சுவடியில் இருந்த தமிழ் நூல்களை அச்சாக்கிய பெருமைக்குரியவர்கள்.

Scanned by CamScanner

## சுவடிகளின் அமைப்பு

ஓலைகளின் அளவிற்கு ஏற்பச் சுவடிகளின் நீள அகலங்கள் அமையும். இறைவணக்கப் பாடல், நூலின் பெயர், நூலாசிரியர் பெயர், நூல் வந்த வழி, நூலின் பயன் ஆகியவையும் சுவடியில் அமைந்திருக்கும்.பம்பர வடிவச் சுவடி, சிவலிங்க வடிவச் சுவடி, கலப்பு ஏடுகளுடைய சுவடி என ஓலைகளின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு சுவடிகள் அமைந்துள்ளன. பிற்காலச் சுவடிகள் பதவுரை, பொழிப்புரை உள் தலைப்பு போன்ற முறையில் எழுதப்பட்டுள்ளன. மிக நீண்ட ஏடுகளாக இருப்பின் இரண்டு பத்திகளாகப் பிரித்து எழுதப் பட்டுள்ள சுவடிகளும் காணப் பெறுகின்றன.

## சுவடியின் வகைகள்

தமிழில் கிடைத்துள்ள சுவடிகளைப் பொருள் நடை, தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

- பொருளடிப்படையில் சுவடிகளை அகராதி, அரிச்சுவடி, இரசவாதம், இலக்கணம், இலக்கியம், கணிதம், சமயம், ஜாலம், சோதிடம், நாடகம், புவியியல், மருத்துவம், மாந்தரீகம், வரலாறு, வானவியல் என்ற பதினாறு வகைகளாகப் பிரிக்கலாம்.
- நடை அடிப்படையில் சுவடிகளில் காணும் மொழி நடை அடிப் படையில் பாட்டு நடைச்சுவடிகள், உரைநடைச் சுவடிகள், பாட்டும் உரையும் கலந்த நடைச்சுவடிகள், மணிப்பிரவாள நடைச்சுவடிகள், பிறமொழிச்சுவடிகள் என ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.
- தன்மை அடிப்படையில் சுவடிகளின் தன்மையை அடிப்படை யாகக் கொண்டு மூலநூல் சுவடிகள், மூலம் மட்டும் உள்ளவை, முற்றுப்பெற்றவை, பிழையற்றவை, படிக்க இயலும் நிலையில் உள்ளவை என ஐந்து வகைகளாகக் காணலாம்.

சுவடிகளைப் பற்றிய பிற செய்திகள் சுவடிகள் கூந்தற்பனை, நுங்குப்பனை ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளன. காலத்தால் மிகவும் பழமையான ஏடு அகத்தியர் திரட்டு என்பதாகும். இது கி.பி.1731இல் எழுதப்பட்டுள்ளது.காலத்தால் மிகப் பிந்தைய ஏடு அகஸ்தியர் சூத்திரம் என்பதாகும். கி.பி.1942இல் எழுதப்பட்டுள்ளது. அதிக இதழ்கள் கொண்ட பெரிய ஏடு அசுவமேதயாகக் கதை என்பதாகும். குறைந்த இதழ்கள் கொண்ட சிறிய ஏடு நந்தீசர்கல்ப சூத்திரம் என்பதாகும்.

Scanned by CamScanner

மிகநீளமான ஏடு ஆதாரபத்திர நகல்கள், கடன் முறி முதலானவை. நீளம் மிகக் குறைவான ஏடு இடைக்காடர் சூத்திரம் என்பதாகும். அதிக அகலம் கொண்டது அமிர்த மதன நாடகம். குறைந்த அகலம் கொண்ட ஏடு சட்டைநாதர் ஊசல். பெரிய எழுத்துக்கள் உள்ள ஏடு எண்ணச் சிந்து.

சுவடிகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களை ஏற்றமுடனும் சிறப்புடனும் பதிப்பித்துத் தந்த தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களைத் தமிழ் இலக்கிய உலகு என்றும் மறவாது.தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், இன்னும் வேகமாகச் செயல்பட்டு சுவடிகளில் உள்ளவற்றைப் பதிப்பிக்க விரைவான முயற்சிகளை மேற்கொண்டால் இன்னும் பல அரிய தமிழ் நூல்களைப் பெற்றுத் தமிழுலகம் வளம் பெறும்.

## 13. நாட்டுப்புறவியல்

தமிழ் இலக்கியத்தில் நாட்டுப்புறவியல் வளர்ந்து வரும் துறை களுள் ஒன்றாகும். மானிடவியல், உளவியல், தத்துவம், வரலாறு, மொழி யியல் ஆகிய துறைகளுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்து வருகின்றது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, உண்மையான நிலையில் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப்புறவியலாகும். சிறப்பாக நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகளையும் இலக்கியங்களையும் கலைகளையும் ஆராய்வது நாட்டுப்புறவியல் எனலாம்.

### நாட்டுப்புறவியல் தோற்றம்

நாட்டுப்புற மக்களின் கலை, இலக்கியங்களை ஆராய வேண்டும் என்ற எண்ணம் முதன் முதலில் மேனாட்டாருக்குத்தான் தோன்றியது. பொது மக்களைச் சார்ந்த மரபு முறைகள் என்றும் பொதுமக்கள் இலக்கியம் என்றும், பொதுப் புராணவியல் என்றும் நாட்டுப்புறவியல் வழங்கப்பட்டது. பின்னர் நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folk lore' என்ற சொல் உருவாக்கப்பட்டது.

நாட்டுப்புறவியல் சொல் விளக்கம் 'Folk lore' என்ற சொல்லையும், பகுப்பையும் தந்த பெருமை வில்லியம் ஜான் தாமஸ் (மேல்நாட்டு அறிஞர்) அவர்களையே சாரும். இதற்குப் பின் இத்துறையில் முறையான ஆய்வுகள் வளர்ந்தன. மனிதனின் சடங்கு முறைகள், நம்பிக்கைகள், கதைப்பாடல்கள், பழமொழி, நாட்டுப்புறப் பாடல் முதலியவற்றை இச்சொல் குறிப்பதாக அவர் கூறியுள்ளார். பழங்காலப் பண்பாட்டின்

Scanned by CamScanner

எச்சம் நாட்டுப் புறவியல் என்பது அவர் கருத்தாகும். Folk Lore என்பது Folk Lore என்ற இருசொற்களின் இணைப்பு. ஐரோப்பிய நாடுகளில் Folk என்ற சொல் விவசாய மக்களைக் குறித்துப் பின்னர் நாட்டுப்புற மக்களைக் குறித்தது. lore என்பதற்கு மரபும் செய்தித் தொகுதி என்றும் வழக்காறு என்றும் பொருள் கொள்ளலாம். Folk Lore என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகத் தமிழில் நாட்டுப்பண்பாட்டியல், நாட்டார் வழக்காற்றியல், வாய்மொழி இலக்கியம், ஏட்டில் எழுதா இலக்கியம், நாடோடி இலக்கியம், நாடோடிக்கலை என வழங்கப்பட்டாலும் நாட்டுப்புறவியல் எனும் சொல்லாட்சியே பெரு வழக்காக வழங்கப்பட்டு வருகின்றது.

## நாட்டுப்புறவியலை அறிமுகப்படுத்தியவர்கள்

நாட்டுப் புறவியலின் அருமையைத் தமிழகத்தில் உணரச் செய்தவர்கள் மேலை நாட்டு அறிஞர்களே.

- **Charles E. Gover** - The Folk songs of South India
- **H. White head** - The village Gods of South India
- **Herman Jensen** - Classified collection of Tamil proverbs
- **M.B.Emeneau** - studies in the Folk Tales of India Thodas, Kotas
- **A.Lazarus** - Dictionary of proverbs

## தமிழில் வழிகாட்டியவர்கள்

தமிழில் நாட்டுப்புற இலக்கியங்களில் முதலில் பாடல்களே மிகவும் நேசிக்கப்பட்டன.

- மு. அருணாசலம் - காற்றிலே மிதந்த கவிதை.
- கருணானந்த சுவாமிகள் - பவளக்கொடி மாலை
- தாண்டவராய முதலியார் - கதாமஞ்சரி
- லாரி வெளியீடு - பழமொழிகள்
- அருணாசல முதலியார் - இரு சொல் அலங்காரம்

இவை முறையே நாட்டுப்புறப் பாடல், கதைப்பாட்டு, கதை, பழமொழி, விடுகதை ஆகிய நாட்டுப்புற இலக்கியங்களின் முதல் நூல்களாக விளங்குகின்றன.

## நாட்டுப்புற இலக்கியத் தொகுப்பர்கள்

பேச்சு வழக்கில் இருந்த நாட்டுப்புற இலக்கியக் கருவூலங்களைப் பாதுகாத்துத் தொகுத்தவர்களின் பணி பாராட்டுக்குரியது.

Scanned by CamScanner

- அன்னகாமு - ஏட்டில் எழுதாக் கவிதைகள்
- கி.வா.ஜ. - நாடோடி இலக்கியம், மலையருவி
- நா.வானமாமலை - வீரபாண்டிய, காத்தவராய, முத்துப்பட்டன் கதைப்பாடல்கள்.
- தமிழண்ணல் - தாலாட்டு
- ஆறு.அழகப்பன் - தாலாட்டு ஐநூறு
- அழ.வள்ளியப்பா - பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்
- டி.என்.சுப்பிரமணியம் - காட்டுமல்லிகை
- தூரன் - காற்றிலே வந்த கவிதை
- ச.வே.சுப்பிரமணியன் - தமிழில் விடுகதைகள்
- மணலிசோமன் - நாட்டுப்புறப் பாடல்கள்
- மெ.சுந்தரம் - நாட்டுப்புறப் பாடல்கள்
- வி.எஸ்.நாதன் - மலைநாட்டார் பாடல்கள்
- மு.அருணாசலம் - தாலாட்டு இலக்கியம்

**நாட்டுப்புறவியல் ஆய்வுகள் சில...**

நாட்டுப்புறப் பாடல்களையும், கதைகளையும், கலைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் ஆய்வு செய்து பட்டங்கள் பெற்றோர் பலர். செய்து வருவோர் மிகப் பலர். அவர்களுள் சிலரைச் சுட்டுவது இத்துறையின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதாக அமையும்.

- பா.ரா.சுப்பிரமணியம் - Folk love of Tamilnadu
- என்.சியாமளா - Folk Music and dance of Tamilnadu
- கே.பி.எஸ்.ஹமீது - Folk love of Nanchilnad
- ஆறு அழகப்பன் - a critical study of Folksongs in Tamilnadu
- சாலை இளந்திரையன் - Tamil proverb and society
- மு. இராமசாமி - தோற்பாவை நிழற்கூத்து
- ஜி.சாந்தி - Lingistic analysis of Folk songs in Tamil
- ஆறு இராமநாதன் - தென்னார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்

**நாட்டுப்புறவியல் கழகங்கள்**

நாட்டுப்புற இலக்கியங்களைப் பேண, கழகங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவற்றுள் இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுக் கழகம் போன்றவை குறிப்பிடத்தக்கன.

Scanned by CamScanner

இந்தியத் தமிழ்நாட்டுப்புறவியல் கழகம் திண்டுக்கல்லில் 1982ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கின் போது உருவானது. ச.அகத்தியலிங்கம் தலைவராகவும், தேக்கமலை இயக்குநராகவும், ஆறு.இராமநாதன் அமைப்பாளராகவும் செயல்பட்டனர்.

நாட்டுப்புறவியல் ஆய்வுக்கழகம் மதுரையில் 1961ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தலைவர் என்.எம்.செல்வம் துணைத்தலைவர்கள் தமிழண்ணல், சரசுவதி வேணுகோபால், செயலர் துளசி ராமசாமி ஆகியோர் பணியாற்றினர். நாட்டுப்புறவியல் தொடர்பான கள ஆய்வு. இதழ் வெளியிடுதல், ஆய்வாளர்களைச் சிறப்பித்தல் போன்ற பணிகளை நோக்கமாகக் கொண்டது.

நாட்டுப்புறவியலில் தடம் பதித்தவர்கள் நாட்டுப்புறவியலை முதன்மையாகக் கொண்டு படைப்பாலும், பணியாலும் பணியாற்றியவர்களுள் ஓம் பெரியசாமி, ச.வளவன், சு.சண்முகசுந்தரம், ஜே.ஆர்.சுரேந்திரன் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

ஓம் பெரியசாமி நாட்டுப்புறக் கிராமிய கலைகளில் சோதனை செய்து வெற்றி பெற்றவர். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கிராமிய நடனத் தொண்டுசெய்து வருபவர். காவடி, கரகம், பொய்க்கால் குதிரை போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றவர். உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தவர். கரகக்கலை கற்பது எப்படி? என்ற நூலை எழுதியவர். காவடிக்கலைச் செம்மல், கரகக்கலைப் பேராசிரியர், நடன சக்கரவர்த்தி, கலைமாமணி ஆகிய பட்டங்களைத் தன்னுடைய பணியால் பெற்றவர்.

சா.வளவன் நாட்டுப்புறவியலில் நாட்டம் மிக்கவர். நாட்டுப்புறவியல் கட்டுரைகள் எனும் நூலைத் தந்துள்ளார்.

சு.சண்முக சுந்தரம் திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு சமுதாயப் பார்வை என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார். நாட்டுப்புறவியலின் பல்வேறு துறைகளைப் பற்றிய தனி நூல்களைத் தந்தவர். நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம், நாட்டுப்புற இலக்கிய வரலாறு, தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், திருமணப்பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறச்சிந்தனைகள் போன்ற பல நூல்களைப் படைத்தளித்த சிறப்பிற்குரியவர்.

ஜே.ஆர்.சுரேந்திரன் தமிழகத்தில் பழமையான கிராமியக் கலைகள் புத்துயிர் பெற வேண்டும் என்ற எண்ணம் மிக உடையவர். தமிழகக்

Scanned by CamScanner

கிராமிய நடனங்கள், ஸ்ரீ ஆயிரத்தம்மன் ஆற்றுப்படை, நையாண்டி மேளம் போன்றவை இவருடைய வெளியீடுகள்.

**இன்னும் பலர்...**

நாட்டுப்புறவியலைப் பற்றிய நூல்களைத் தந்தவர்கள்: தே.லூர்து, கே.காந்தி, தமிழவன், தி.நடராசன், பூர்ணிமா சகோதரிகள், கி.ராஜ நாராயணன், பீர.வேலுசாமி, சு.சக்திவேல், அ.ம. சத்தியமூர்த்தி, மனலிசோமன் போன்றோரின் பணிகளும் குறிக்கத்தக்கன.

நாட்டுப்புறவியலின் வகைப்பாடு நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் நம்பிக்கைகள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம்.

## நாட்டுப்புற இலக்கியம்

- நாட்டுப்புறப் பாடல்கள் (Folk songs)
- நாட்டுப்புறக் கதைகள் (Folk tales)
- நாட்டுப்புறக்கதைப்பாடல்கள் (Folk ballads)
- பழமொழிகள் (Proverbs)
- விடுகதைகள் (Riddles)
- புராணக்கதைகள் (Myths)

முதலியன நாட்டுப்புற இலக்கிய வகைகளாக அமைகின்றன.

கலைகளும் நம்பிக்கைகளும்

- நாட்டுப்புறக் கலைகள் (Folk arts)
- நாட்டுப்புறக் கைவினைப்பொருட்கள் (Folk Crafts)
- நாட்டுப்புறப் பழக்கவழக்கங்கள் (Folk customs and habits)
- நாட்டுப்புற ஆடல் (Folk dance)
- நாட்டுப்புறத் தெய்வங்களும் திருவிழாக்களும் (Folk Dance and Festivals)
- நாட்டுப்புற விளையாட்டுகள் (Folk Games)
- நாட்டுப்புற மருத்துவம் (Folk Medicine)

முதலியன நாட்டுப்புறவியலின் கலைகளையும், நம்பிக்கைகளையும் சார்ந்தன. நாட்டுப்புறவியலைச் செயல்வகை, அறிவியல் வகை, மொழியியல் வகை, இலக்கியவகை எனப் பகுத்துக்காணும் பார்வையும் உண்டு.

Scanned by CamScanner

நாட்டுப்புறவியலையும் அதனைச் சார்ந்த வகைகளையும் இன்னும் விரிவாக ஆராயவும் வெளிப்படுத்தவும் இடமுண்டு. இன்றைய இதழ்களும் கருத்தரங்குகளும், ஆய்வுகளும் இத்துறையை மேன்மையுறச் செய்து வருகின்றன. தமிழ் மக்களின் மண்ணோடும் மனத்தோடும் தொடர்புடைய இத்துறையை மேலும் வளர்ப்பது நமது கடமையாகும்.

## 14. இதழியல்

இன்றைய மனிதனுக்கு உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளில் தொடர்பியலும் ஓர் அடிப்படைத் தேவையாக மாறியுள்ளது. காரணம் மனிதனுக்குத் தன்னைச் சுற்றியுள்ள உலக நடப்புகளை நாளும் அறிய வேண்டும் என்ற இயல்பான உணர்வேயாகும். தொடர்பியல் சாதனங்களில் பழமையானவை இதழ்கள். வானொலியையும், தொலைக்காட்சியையும் விடச் செய்தித்தாள்களும், கால இதழ்களும் நிரந்தரத் தன்மை பெற்றிருப்பதால் மீண்டும் மீண்டும் திருப்பிப் பார்க்கவும் சிந்திக்கவும் ஏற்றதாக அமைந்து தொடர்பியல் சாதனங்களில் தனிச்சிறப்பைப் பெறுகின்றன.

### இதழியலின் தனிச்சிறப்பு

இந்தியாவில் வானொலி, தொலைக்காட்சியின் தொடர்பியல் பணி அரசின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் எல்லாத் தகவல்களும் வெளிவருவதில்லை. உலக, தேசிய மாநில அளவுகளில் நடைபெறும் பல்வேறு சமூக அரசியல், பொருளாதாரச் செய்திகளை எத்தகைய சார்பு நிலை இல்லாமலும், பிறர் கட்டுப்பாட்டிற்கு உட்படாமலும் சுதந்திரமாகப் பரப்பிடும் எழுத்துச் சுதந்திரம் இதழ்களுக்கு உண்டு. இவ்எழுத்துச் சுதந்திரம் இதழ்களின் உயிர் மூச்சாக விளங்குகிறது.

### இதழ்களின் தேவையும் பயனும்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசு நாட்டின் அரசுப் பொறுப்பில் இருப்பவர்கள் செய்யும் நல்லவைகளையும் அல்லவைகளையும் துணிவோடு சுட்டிக்காட்டும் காவல் பணியைத் தொடர்பியல் சாதனங்களில் இதழ்கள் சிறப்பாகச் செய்ய இயலும். ஆட்சியில் பிழைகள் நிகழும்போது அறிவுறுத்தவும், தேவையான பொழுது மக்கள் கருத்தை உருவாக்கவும், சிறப்பான அரசு அமைய மக்களுக்கும் அரசுக்கும் இடையே ஓர் உறுதியான இணைப்பை ஏற்படுத்தவும் இதழ்கள்

Scanned by CamScanner

தேவைப் படுகின்றன. எனவேதான் இதழ்கள் குடியாட்சியின் இரத்த நாளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சமூக, அரசியல், பொருளாதார செய்திகளை மட்டுமின்றி இலக்கிய வளர்ச்சிக்கு இதழ்கள் ஆற்றியுள்ள பணிகள் மகத்தானவை. தமிழில் புத்திலக்கியங்களை அர்த்தமுடன் அடையாளப்படுத்தி வளர்த்துள்ளன. இன்றும் இதழ்களின் வழி இலக்கியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

### இதழியல் விளக்கம்

இதழியல் என்பதற்கு அறிஞர்கள் பலர் பல விளக்கங்களைத் தருகின்றனர்.

#### அ.மா.சாமி

டையர்னல் (Dirnal) என்ற பழைய இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது 'சர்னல்', 'டையர்னல்', 'அன்று', என்று பொருள், ஜர்னல் என்றால் அன்றாடம் நடந்ததை எழுதி வைக்கும் ஏடு என்று பொருள்படும். இப்பொழுது ஜர்னல் என்பது இதழ்களைக் குறிக்கிறது.

தமிழ்க் கலைக்களஞ்சியம் பத்திரிகை இருவகைப்படும். ஒன்று தினசரித்தாள் (News Paper) மற்றது சஞ்சிகை (Magazine) தினசரித்தாள் என்பது நாள்தோறும் உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், செய்தி களையும் சேகரித்தும் அவை பற்றிக் கருத்துக்கூறியும் வெளியிடுவது. சஞ்சிகை என்பது பொதுவாகப் பல வகையான பொருள்கள் பற்றிக் கட்டுரைகளும் படங்களும் தருவது.

#### ஆ.பி. அந்தோணி இராசு

செய்திகளைத் திரட்டுவதும் பரப்புவதும் இதழியல் என்ற விளக்கம் தருவதோடு இதழியலைக் கலையாகவும், அறிவியலாகவும் தொழிலாகவும் காணுகின்றார்.

வேறு பெயர்கள் இதழியல் என்பதைச் சஞ்சிகையியல், தாளிகை யியல், பத்திரிகையியல் என்ற பெயரிலும் அழைக்கின்றனர். சேகரித்த செய்திகளையும், படங்களையும் நாளில் பதிப்பித்துப் பரப்புவது தாளிகையியல் அல்லது இதழியல் ஆகும்.

### இந்திய இதழியல் வரலாற்றுப் போக்கு

இந்திய இதழியல் வரலாறு இரு நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை உடையது.1780ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29ஆம் நாள் சனிக்கிழமை இந்தியாவின் முதல் செய்தித்தாள் ஹிக்கீஸ் பெங்கால்

Scanned by CamScanner

கெசட் அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வைசர் எனும் பெயரில் வெளி வந்தது. இவ்விதழை ஆங்கிலேயரான ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹக்ஸிகி என்பவர் வெளியிட்டார்.சில குறைபாடுகளால் பெங்கால் கெசட்டின் வாழ்வு இரண்டாண்டுகளுக்குள் முடிவு பெற்றது. அதன் பிறகு வாணிப நோக்கில் இந்தியா கெசட் என்ற இதழை1780 நவம்பரில் கல்கத்தாவில் தொடங்கினர். 1784இல் கல்கத்தா கெசட் 1785இல் பெங்கால் ஜர்னல், 1786இல் கல்கத்தா கிரானிக்கள் ஆகிய இதழ்கள் தொடங்கப்பட்டன. 1789இல் பம்பாய் ஹெரால்டு. 1790இல் பாம்பே கூரியர் போன்ற இதழ்களும் வெளிவந்தன. இந்தியர் தொடங்கிய முதல் இதழாக வங்காளத்தைச் சேர்ந்த கங்கநாதர் பட்டாச்சார்யா 1816இல் பெங்கால் கெசட் என்ற இதழைத் தொடங்கினார். பின்னர் இந்திய மொழிகள் பலவற்றிலும் இதழ்கள் தோன்றி வளர்ந்தன. தொடக்க கால இதழ்கள் அரசியலைப் பற்றி கவலை கொள்ளவில்லை. மாறாகச் சமுதாயச் சீர்திருத்தம், சமய மறுமலர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தின.

## தமிழ் இதழியல் ஒரு பார்வை

இந்தியாவில் 80க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் நாளிதழ் களும், பருவ இதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. 1831ஆம் ஆண்டு தமிழ்ப் பத்திரிகா என்ற திங்கள் இதழ் சென்னை கிறித்தவ சமயப் பரப்பு சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. 1841இல் ஜனசிநேகன் என்ற மாதமிருமுறை இதழ் வெளிவந்தது. 1855இல் பெர்சிவல் என்னும் கிறித்தவர் தினவர்த்தமானி என்ற வார இதழைச் செய்தி, சமயம், இலக்கியம், அறிவியல் போன்ற பலதுறை விளக்கங் களையும் தாங்கிய முழுமை பெற்ற முதல் வார இதழாக வெளியிட்டார். அதன்பின்னர் சமயம், இலக்கியம், சமூகம் போன்ற நிலைகளில் இதழ்கள் அதிகம் வெளிவந்தன. சில இயக்கங்களும் தமிழ் இதழியலை வளர்த்தன. அவற்றுள் தேசிய, திராவிட இயக்கங்களின் பணிகள் குறிப்பிடத்தக்கன. இதழியலால் வளர்ந்த அரசியல் கட்சிகளும் உண்டு.

இன்று தமிழகத்தில் எண்ணற்ற இதழ்கள் வெளிவந்து கொண்டி ருக்கின்றன. கால அடிப்படையிலும், உள்ளடக்க அடிப்படையிலும் பொது நிலையிலும் இதழ்களை வகைப்படுத்திக் காணும் அளவிற்கு இதழ்கள் பெருகியுள்ளன.

## இதழியலை வளர்த்த தமிழறிஞர்கள் சிலர்

தமிழ் இதழியலில் புதிய போக்கையும், மலர்ச்சியையும் ஏற்படுத்தி யவர்களுள் பாரதியார், ஜி.சுப்பிரமணிய அய்யர், திரு.வி.க. டி.எஸ்.

Scanned by CamScanner

சொக்கலிங்கம், சி.பா. ஆதித்தனார், ஏ.என்.சிவராமன், கல்கி, எஸ்.எஸ். வாசன், வல்லிக்கண்ணன், பொள்ளாச்சி நசன் போன்றோரின் பணிகள் குறிப்பிடத்தக்கன.

**பாரதியார்**

மறுமலர்ச்சித் தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்பு முனையாய் அமைந்தவர். பெண்கள் முன்னேற்றத்திற்கென 1905இல் உதயமான சக்ரவர்த்தினி எனும் மாத பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பேற்றார். இதற்கு முன்னர் சுதேசமித்திரனில் துணையாசிரியராகப் பணி யாற்றினார். தம்முடைய தேசிய எழுச்சிச் சிந்தனைகளை மக்களிடையே பதிக்க இந்தியா எனும் பத்திரிகையைத் தொடங்கினார். Bala Bharat எனும் ஆங்கில வார இதழை Young India என்ற பெயர் மாற்றத்துடன் வெளியிட்டார். 1910இல் கர்மயோகி, 1913இல் ஞானபாநு ஆகிய இதழ்களையும் தொடங்கினார். அறிவுறுத்தல் பணியைச் செய்யும் கருத்துப்படங்களை (Cartoons) முதன் முதலில் அறிமுகப்படுத்திய பெருமையும் பாரதிக்கு உண்டு.

**ஜி.சுப்பிரமணிய அய்யர்**

பாரதியாரை இதழியல் துறைக்கு அறிமுகப்படுத்திய பெருமகன். சுதேசமித்திரனின் ஆசிரியர். ஆங்கிலம் அறியாத் தமிழ் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தவே இவ்விதழைத் தொடங்கி நடத்தினார். இவர் இதழ், விடுதலைப் போருக்குப் படைக்கலனாக விளங்கியது. தமிழ்நாட்டின் முதல் அரசியல் இதழ் என்ற சிறப்பினைப் பெற்றது. தலையங்கம் படைத்துப் புகழ் பெற்றது. தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து இந்தியர்களின் உரிமைக்காகப் போரடிக் கொண்டிருந்த காந்தியடிகளின் போராட்டத்தை அறிமுகப் படுத்தியதும் அய்யரின் சுதேசமித்திரன் என்பது குறிப்பிடத்தக்கது.

**டி.எஸ்.சொக்கலிங்கம்**

பழம் பெரும் இதழாசிரியர். தமிழ்நாடு இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி, பின் ஆசிரியர் பொறுப்பேற்றார். 1930இல் காந்தி என்ற இதழைத் தொடங்கினார். இவர் நடத்திய மற்றொரு இதழ் வந்தே மாதரம் என்பது. 1932 முதல் தினமணியின் முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்று, தரமான தலையங்கங்களைத் தந்தவர். தினசரி என்ற இதழை மக்கள் ஆதரவுடன் நடத்திய பெருமைக்குரியவர். தான் பணியாற்றிய உரு வாக்கிய இதழ்களின் வழி வேகமான கட்டுரைகளையும், விவேகமான செய்திகளையும் தந்து தமிழ் நாளிதழ்களின் தந்தையாகக் கருதப்படுபவர்.

Scanned by CamScanner

**சி.பா.ஆதித்தனார்**

வழக்கறிஞர் பணியை விடுத்து இதழியல் பணியில் சுவடு பதித்தவர். 1942இல் தமிழன் வார இதழையும் தினத் தந்தியையும் தொடங்கிய பெருமைக்குரியவர். காகிதத் தட்டுப்பாடு ஏற்பட்டபொழுது Sun Paper Mill நிறுவி புரட்சி செய்தவர். தமிழக மக்களிடையே பத்திரிகை படிக்கும் வழக்கத்தினை மிகுதிப்படுத்திய பெருமை இவருக்குண்டு. பாமர மக்களும் புரிந்து கொள்ளும் எளிய நடை, தெளிவான அச்சுக்கோப்பு, பெரிய எழுத்துக்களில் தலைப்பிடல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தினார். இரவு பகல் பாராது இதழியல் பணி செய்து தினத்தந்தியை முதன்மையான நாளிதழாக உயர்த்திய தந்தியின் தந்தை. இவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி இவரது மகன் சிவந்தி ஆதித்தன் இன்றும் தினத்தந்தியைச் சிறப்பாக நடத்தி வருவ தோடு மாலைமுரசு என்ற மாலை நாளிதழையும்,ராணி, தேவி போன்ற வார இதழ்களையும் நடத்தி வருகின்றார்.

**ஏ.என்.சிவராமன்**

விடுதலைப் போராட்ட வீரர். சிறப்புமிக்க நாளிதழ் தினமணியில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். கணக்கன் என்ற பெயரில் இவர் தினமணியில் படைத்தவை எண்ணற்றவை. டி.எஸ்.சொக்க லிங்கத்திடம் துணை ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். வாழ்நாள் முழுமையையும் இதழியல் பணிக்கு அர்ப்பணித்தவர். இதழியல் உலகில் இவரை ஒத்த அனுபவமும் தொழில் நுட்பமும் பெற்ற அறிஞரைக் காண்பது அரிது. அறிவியல் தமிழுக்கும் அரிய பணிகளைச் செய்தவர். தினமணியின் இன்றைய எழுச்சிக்கும் புகழுக்கும் காரணம் இவரே. பத்திரிகையின் ஜாம்பவான் எனப் புகழப்படுபவர்.

**கல்கி**

நவசக்தியில் 1923முதல் திரு.வி.க.வுக்குத் துணையாக இருந்தார். விமோசனம் என்ற மதுவிலக்குப் பிரச்சார இதழின் துணையாசிரியராக விளங்கியவர். இதழ்களின் வழி இலக்கியப் பணியாற்றியவர். எழுத்தைத் தன் வாழ்வாகக் கொண்டவர். ஆனந்த விகடன் ஆசிரியராகவும், கல்கியைத் தொடங்கியவராகவும் திகழ்கிறார். இதழியல் துறையின் கலங்கரை விளக்கம். படைப்பால் புதிய வாசகர் வட்டத்தை ஏற்படுத்தி இதழ்களை வளர்த்தவர். புகழோடும், முதன்மையோடும் இன்று வெளிவந்து கொண்டிருக்கும் கல்கியும், ஆனந்த விகடனும் இவருடைய பணியை நினைவுபடுத்துகின்றன.

Scanned by CamScanner

**எஸ்.எஸ்.வாசன்**

சொந்த அச்சகம் அமைத்து நூல்களை வெளியிட்ட இதழியலாளர். தெலுங்கிலும், ஆங்கிலத்திலும்இதழ்களை நடத்திய தமிழறிஞர். திரைப் படத் துறையிலும் கவனம்செலுத்தியவர். விகடகவி புதூர் வைத்திய நாத ஐயரிடம் முந்நூறு ரூபாய்க்கு விகடனை விலைக்கு வாங்கி இதழியல் பணி செய்து உயர்ந்தவர்.

**வல்லிக்கண்ணன்**

கவிஞர். திறனாய்வாளர். படைப்பாளர். இதழாசிரியர் எனப் பன்முகங்களைக் கொண்டவர். சிறுபத்திரிகைகளை வரவேற்று ஊக்கப் படுத்துவதில் முதன்மையானவர். இதழ்களின் வழி படைப்புகளைத் தந்து தனிச்சிறப்பு பெற்றவர். இல்லறம் துறந்து இதழ்களின் வழி பணியாற்றிய பெருமைக்குரியவர்.

பொள்ளாச்சி நசன் தமிழில் சிற்றிதழ்களைச் சேகரித்து வருகின்ற ஆர்வலர். சேகரிப்புப் பணியை முதன்மையாகக் கொண்டதால் இல்லறம் ஏற்காதவர். உலக, தேசிய, மாநில அளவில் வெளிவருகின்ற சிற்றிதழ் களின் தொகுப்பு இவருடைய இதழியல் பணியின் மகுடம். சிற்றிதழையும் நடத்தி வருகிறார்.

**இன்னும் பலர்**

வ.ராமசாமி, வி.நடராச ஐயர், வைத்தியநாத சர்மா, வரதராஜுலு நாயுடு, ரங்கசாமி ஐயங்கார், ஸ்ரீனிவாச ஐயங்கார், நாரணதுரைக்கண்ணன், கருப்பையா, சோலை இருசன், மணவை முஸ்தபா, கலைஞர் கருணாநிதி முதலானோரும் தமிழ் இதழியல் பணியில் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

## இதழியல் நூல்கள்

இதழியல் தனித்துறையாக வளர்ந்திருப்பதோடு கல்லூரிகளில் பாடமாகவும் பயிற்றுவிக்கப்படுகிறது. இதனால் இத்துறை சார்ந்த நூல்கள் எழுதுவது அவசியமாகிறது.

- இரா.கோதண்டபாணி – இதழியல்
- தங்கமணியன் – பத்திரிகைத் தமிழ்
- பழனி.அரங்கசாமி – செய்தி உலகம்
- மா.ரா.இளங்கோவன் – இந்திய இதழ்கள்
- சி.பா.ஆதித்தனார் – பத்திரிகை மொழி நடை
- சோமலெ – தமிழ் இதழ்கள்

Scanned by CamScanner

- ஆ.பி.அந்தோணி இராசு — இதழியல் ஓர் அறிமுகம்
- வல்லிக்கண்ணன் — தமிழில் சிறு பத்திரிகைகள்
- அ.மா.சாமி — 19ஆம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள்
- பொள்ளாச்சி நசன் — சிறு பத்திரிகைகள்
- மா.ப.குருசாமி — இதழியல் கலை
- சோ.கலைவாணி — பத்திரிகை கலை
- தி.மா. சரவணன் — இதழியல் நூலடைவு
- புத்மன் — மூன்றாவது கண்.

## இதழியல் ஆய்வுகள்

இதழ்களை ஆய்வுப் பெருளாகக் கொண்டு பட்டங்கள் பெற்றவர்கள் பலர். தமிழிலக்கிய ஆய்வில் புதிய முயற்சி. அவற்றுள் சில,

| | | |
|---|---|---|
| பா.இறையரசன் | - | இதழியல் முன்னோடிகள் |
| இரா.ஸ்டீவன்சன் | - | எழுபதுகளில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகள் |
| கா.வாசுதேவன் | - | தொடர்பியலில் இந்தியா டுடே - துக்ளக் இதழ்களின் அரசியல் |
| க. தம்புசாமி | - | தினமணி, தினமலர், தினத்தந்தி - ஓர் ஒப்பீடு |
| தனராசு | - | தமிழ் இதழ்களில் சமூக மதிப்புகள் |

## இதழ்களின் பணிகள்

இதழ்கள் சிறப்பான குறிக்கோளோடு செயல்படவேண்டும். வெளியிடும் படைப்புகளும், படங்களும் மக்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் பயன்தரக்கூடிய வகையில் அமைய வேண்டும். இதழ்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளாக ஐந்தினைக் கூறலாம்

- அறிவித்தல்
- அறிவுறுத்தல்
- மகிழ்வித்தல்
- வழிகாட்டுதல்
- வாணிபம் செய்தல்

## இதழ்களின் வகைகள்

இதழ்களை விற்பனை, காலம், உள்ளடக்கம், பொது என நான்கு நிலைகளில் வகைப்படுத்திக் காணலாம்.

Scanned by CamScanner

விற்பனை அடிப்படையில் பேரிதழ்கள், நடுத்தர இதழ்கள், சிற்றிதழ்கள்.

கால அடிப்படையில் நாளிதழ்கள், கால இதழ்கள், நாளிதழ்களைக் காலை மாலை என இரு வகையாகவும், கால இதழ்களை வாரம், வாரம் இருமுறை, மாதமிருமுறை, மாதம், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு என ஏழு வகையாகவும் வகைப்படுத்தலாம்.

உள்ளடக்க அடிப்படையில் இதழ்களில் இடம் பெறும் படைப்புகளை மையமிட்டுச் செய்தி, கருத்து, பொழுது போக்கு, விளையாட்டு, மருத்துவம், துணுக்கு, படம், அறிவியல், சிறுவர், இலக்கியம், அரசியல், சோதிடம், புலனாய்வு, திரைப்படம், சமயம், முற்போக்கு, தொழில், மகளிர், சாதி, மஞ்சள் என இருபது வகைகளாகப் பிரிக்கலாம். இவ்வகைப்பாடு தமிழ் இதழியல் வளர்ச்சியைப் பறைசாற்றுவதாக அமைகிறது.

பொது நிலையில் விற்பனை, காலம், உள்ளடக்கம், சார்பு ஆகிய அடிப்படைகளில் இதழ்களை வகைப்படுத்தினாலும் பொது நிலையில் செய்தி, கருத்து, சிறப்பு, பொழுது போக்கு என்ற நான்கு பிரிவுகளுக்குள் அனைத்து வகையான இதழ்களையும் முறைப்படுத்தலாம்.

### இதழியல் வகைகள்

இதழியலின் வளர்ச்சியும், இதழ்களின் பெருக்கமும் இதழியல் துறையில் தனித்துவத்தை ஏற்படுத்தியுள்ளன. செய்திகளை வெளிப்படுத்தும் முறையில் பல வகையான இதழியல் போக்குகளைக் கடைப்பிடித்து வருகின்றன.

- விளக்க இதழியல் (Descriptive Journalism)
- வளர்ச்சி இதழியல் (Development Journalism)
- புரட்சி இதழியல் (Revolutionary Journalism)
- பரிந்துரைஇதழியல் (Advocacy Journalism)
- புலனாய்வு இதழியல் (Investigative Journalism)
- உணர்வூட்டும் இதழியல் (Sensational Journalism)
- பட இதழியல் (Photo Journalism)
- நடையியல் இதழியல் (Stylistic Journalism)
- இழிநிலை இதழியல் (Yellow Journalism)

Scanned by CamScanner

சிற்றிதழ்களும் இலக்கியப் பணியும்

பாவேந்தரின் குயில் குறிப்பிடத்தக்கது. சிறுகதை, கவிதை, முற்போக்கு, நாடகம், பொது இலக்கியம் என்ற நோக்குகளில் வெளிவந்த வெளிவந்து கொண்டிருக்கும் சிற்றிதழ்களின் பெயர்களைக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

**சிறுகதை வளர்த்த சிற்றிதழ்கள்**

| | | | |
|---|---|---|---|
| மணிக்கொடி | (1935) | – | பி.எஸ்.ராமையா |
| சரஸ்வதி | (1955) | – | விஜயபாஸ்கர தொண்டைமான் |
| எழுத்து | (1959) | – | சி.சு.செல்லப்பா |
| இலக்கிய வட்டம் | (1964) | – | க.நா.சு. |
| நடை | (1968) | – | கோ.கிருஷ்ணசாமி |
| ஞானரதம் | (1970) | – | ஜெயகாந்தன் |

**கவிதை வளர்த்த சிற்றிதழ்கள்**

| | | | |
|---|---|---|---|
| ஞானரதம் | (1970) | – | ஜெயகாந்தன் |
| கசடதபற | (1970) | – | நா.கிருஷ்ணமூர்த்தி |
| அஃ | (1972) | – | என்.பரந்தாமன் |
| சதங்கை | (1971) | – | வனமாலிகை |
| பிரக்ஞை | (1974) | – | ஆசிரியர் குழு |
| கொல்லிப்பாவை | | – | ராஜமார்த்தாண்டன் |

**முற்போக்குச் சிற்றிதழ்கள்**

| | | | |
|---|---|---|---|
| தாமரை | (1958) | – | ப.ஜீவானந்தம் |
| ஓங்கு தமிழ் | | – | புலவர் குழுவினர் |
| 'ழ' | | – | ஆத்மாநாம் |
| கனவு | | – | சுப்ரபாரதி மணியன் |
| காலச்சுவடு | | – | மனுஷ்யபுத்ரன் |

**நாடகம் வளர்க்கும் சிற்றிதழ்கள்**

| | | |
|---|---|---|
| வெளி | – | ரங்கராஜன் |
| கல்குதிரை | | |

**இலக்கியம் வளர்க்கும் சிற்றிதழ்கள்**

| | | |
|---|---|---|
| மேலும் | – | சிவசுப்பிரமணியன் |
| கணையாழி | – | கஸ்தூரி ரங்கன் |
| நிகழ் | – | ஞானி |

Scanned by CamScanner

நாட்டின் நாகரிகத்தை மக்களின் மனவளத்தைக் காட்டும் கண்ணாடி களாக இதழ்கள் விளங்குகின்றன. உலக நடப்பினை விரிவாக விளக்கும் ஊடகங்களாகத் திகழ்கின்றன. எளிய பொதுமக்களுக்கும் இலக்கியத் தொடர்பினை ஏற்படுத்துகின்றன. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், புதிய துறைகளின் வரவுக்கும் இதழ்கள் ஆற்றியுள்ள பணியும், அறிஞர்களின் தொண்டும் மறக்க முடியாதன.

## 15. வானொலி

மக்கள் தகவல் தொடர்புத்துறை இப்போது மிகுந்த பயன்பாட்டிற் குரிய ஆற்றல் வாய்ந்த துறையாக விளங்கி வருகின்றது.தொடர்பியல் கருவிகளைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. தனி மனித வாழ்வில் முன்னேற்றம் தருகிற தகவல் தொடர்பியல் கருவிகள், மக்களின் பொது வாழ்விலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. தொடர்பியல் சாதனங்களுள் வானொலி தனிச்சிறப்பைப் பெறுகின்றது.

### பாரதியின் கனவை நனவாக்கிய சாதனம்

வானொலி ஒரு அருமையான கலைச்சாதனம். மூலை முடுக்குகளை எல்லாம் வளைத்து ஒலி வண்ணம் காட்டிக்கொண்டிருக்கும் பெருமக்கள் சாதனமாக விளங்குகிறது.

**"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"**

என்ற பாரதியின் கனவை நனவாக்கிய சாதனம் வானொலி. வானொலி யின் வருகையால் உலக நிகழ்வுகள் வீட்டுக்குள் நடைபெறுகிற உணர்வும், உலக எல்லைகளின் சுருக்கமும் தொலைவும் அருகில் வந்து விட்ட உணர்வும் ஏற்பட்டிருப்பது உண்மை. பாமர மக்களும் பயன் படுத்தக்கூடிய எளிமையான சாதனமாகவும் விளங்குகின்றது.

### வானொலியின் தோற்றம்

இங்கிலாந்து நாட்டில் மார்க்கோனி என்பவர் 1896ஆம் ஆண்டு தமது கண்டுபிடிப்பைப் பதிவு செய்ததும் வானொலி தன் சேவையை முதன் முதலாகத் தொடங்கியது. அதன் பின்னர் உலகின் மற்ற நாடுகளுக்கும் வானொலி பரவ ஆரம்பித்தது.

Scanned by CamScanner

## இந்தியாவில் வானொலி

மார்க்கோனியின் கண்டுபிடிப்புக்கு அடுத்த இருபத்து எட்டு ஆண்டுகள் கழித்து இந்தியாவிற்கு வந்து சேர்ந்தது. 1924ஆம் ஆண்டு இந்தியாவில் முதன் முதலில் சென்னை நகரில் வானொலிக் குழு அமைக்கப்பட்டது. அதே ஆண்டு சென்னை மாகாண ரேடியோ கிளப் ஒலிபரப்பைத் தொடங்கியது. அமைப்பு முறையிலான ஒலிபரப்பு 1927ஆம் ஆண்டு பம்பாயில் தொடங்கப்பெற்றது. 1930ஆம் ஆண்டு சென்னை வானொலிக்குழு கலைக்கப்பட்டுச் சென்னை நகராண்மைக் கழகம் முறையான ஒலிபரப்பைத் தொடங்கியது. இதே ஆண்டு இந்திய அரசின் தொழில் மற்றும் தொழிலாளர் துறையின் கீழ் தி இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ் என்ற அமைப்பை அரசு உருவாக்கியது. 1935ஆம் ஆண்டு ஆகாசவாணி நிலையம் மைசூரில் தொடங்கப் பட்டது. 1936இல் டெல்லி வானொலி நிலையம் ஒலிபரப்பைத் தொடங்கியது. இதே ஆண்டு ஜூன் மாதம் அகில இந்திய வானொலி அறிமுகமானது. பி.பி.சி.யின் அதிகாரபூர்வமான செய்தி அறிக்கை 1922ஆம் ஆண்டு முதல் ஒலிபரப்பாகி வருகிறது. இந்திய வானொலி ஒலிபரப்பு ஐந்தாண்டு திட்டங்களால் வளர்ச்சி பெற்று இன்றைய நிலையை அடைந்திருக்கிறது.

## வானொலி ஒலிபரப்பு முறைகள்

இன்றைய இந்திய வானொலி தன் நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு அமைத்துள்ளது.

- தேசிய அளவில் ஒலிபரப்பாகும் தேசிய நிகழ்ச்சிகள்.
- தலைநகரில் இருந்து ஒலிபரப்பாகும் பல்வேறு மொழிச் செய்தி அறிக்கைகள்.
- மாநிலத் தலைநகர், மற்ற நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகள்.
- வெளி நாட்டவர்க்கும் மற்றவர்களுக்குமான ஒலிபரப்புகள்.

## வானொலி ஒலிபரப்பு வகைகள்

வானொலி ஒலி பரப்பும் நிகழ்ச்சிகளை இருபது வகைகளுக்கு மேல் பகுக்கலாம்.

- பேச்சு இலக்கியப் பேருரை
- கவிதை வாசிப்பு
- சிறுகதைகள்
- நாடகம்
- உரைச்சித்திரம்
- விவரச் சித்திரம்

Scanned by CamScanner

- இசைச்சித்திரம்
- தொழிலாளர்களுக்குரியது
- நேர்காணல்
- குழந்தை நிகழ்ச்சி
- உடல்நலம்
- கல்வி
- கிராமியக்கலை
- நேர்முக வருணனை
- இசை
- கலந்துரையாடல்
- வெளிநிகழ்ச்சிகள்
- பெண்களுக்கானவை
- செய்தி
- விவசாயம்
- இளையபாரதம்
- விளம்பரம்
- அறிவிப்புகள்

இவ்வொலிபரப்பு வகைகளுள் சிறப்பிடம் பெறுவன செய்தியும் இசையும் ஆகும். இதில் அதிக நேரத்தை எடுத்துக் கொள்வது இசை நிகழ்ச்சிகள் ஆகும்.

### வானொலியின் இலக்கியப்பணி

மேற்குறித்த வகைகளுள் இலக்கியப் பேருரை, கவிதை வாசிப்பு, சிறுகதைகள், நாடகம், உரைச்சித்திரம், கிராமியக்கலை, இளையபாரதம், கலந்துரையாடல், நேர்காணல் முதலியன இலக்கியத்தோடு தொடர்புடையன. அவ்வத்துறைகளில் சிறப்புமிக்க தமிழறிஞர்களை அழைத்து அவர்களுடைய சிந்தனைகளை வழங்கி வருகிறது. வானொலி ஒலிபரப்பு வகைகளால் முத்தமிழும் ஏற்றம் பெற்று விளங்குகின்றன.

### வானொலித் தமிழறிஞர்கள்

வானொலியின் மூலம் தமிழ் வளர்த்தவர்கள் பலர். அவர்களுள் லோக.சிகாமணி, இளசை எஸ்.சுந்தரம், வடிவேலன், பிச்சினிக்காடு இளங்கோ, மன்னர் மன்னன், சக்தி சீனிவாசன் முதலியோரின் பணி குறிப்பிடத்தக்கது.

லோக சிகாமணி : சென்னை, நெல்லை, திருச்சி வானொலி நிலையங்களில் நாடக, இசை நிகழ்ச்சிப் பொறுப்பாளராகச் செயல் பட்டவர் மெல்லிசையிலும் நடிப்பிலும் தேர்ந்தவர்.

இளசை எஸ்.சுந்தரம் சென்னை திருச்சி வானொலிகளில் நிகழ்ச்சி அமைப்பாளராகப் பணியாற்றியவர். வானொலி அண்ணாவாக விளங்கியதோடு, திருக்குறள் சிந்தனைகளையும் தந்தவர். பலரை நேர்காணல் செய்து அவர்களது அனுபவங்களை நேயர்களுக்குத் தந்தவர்.

Scanned by CamScanner

வடிவேலன் திருச்சி வானொலியில் செய்தி அறிவிப்பாளராகப் பணியாற்றியவர். வானொலியில் குழந்தைகள், மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளில் பழந்தமிழ் இலக்கியங்களை நாடக வடிவில் அறிமுகம் செய்தவர். விடியலை நோக்கி, மண்ணிலே பிறந்த இசை முதலியன இவர் வானொலி மூலம் நேயர்களுக்குத் தந்த நிகழ்ச்சிகளாகும்.

பிச்சினிக்காடு இளங்கோ திருச்சி வானொலிப் பண்ணை இல்லச் செய்தியாளர், கொட்டும் முரசு, மனிதர்களே கவனியுங்கள், விடியும் பொழுது போன்ற நிகழ்ச்சிகள் இவருடையன. வேளாண் கருத்துக்களைக் கதையாக, கவிதையாக, நாடகமாக, உரையாடல்களாக, மெல்லிசைப் பாடல்களாகப் படைத்தவர்.

மன்னர்மன்னர் புதுவை வானொலியின் துணையாசிரியர், சென்னை வானொலியில் நாடகத்துறை, தமிழ்ப் பேச்சுத்துறை ஆகியவற்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். சர்க்கரைப் பந்தல், கிள்ளைகளே கேளுங்கள் குறிப்பிடத்தக்கன. பாவேந்தரின் ஒரே மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

சக்தி சீனிவாசன் வானொலியில் காந்தி அஞ்சலி, பாரதி வாக்கு, புதிய ஆத்திசூடி, பிழையறப் பேசுதல், பாரதி பாதையில் முதலான நிகழ்ச்சிகளைத் தந்தவர்.

இன்னும் பலர் க.விசுவநாதன், மாறன், என்.ராகவன், கோ.செல்வம், என்.முருகன், க.ஜெயங்கொண்டான், து.சந்திரன் முதலியோரும் வானொலி மூலம் தமிழ்ப்பணி செய்தவர்கள்.

**வானொலி நூலகம்**

புகழ்பெற்று மறைந்த அறிஞர்களின் சிந்தனைகள் பதிவு செய்யப்பெற்று வானொலி நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தலைவர்களின் பிறந்த நாள், மறைந்தநாள் நினைவு கூறப்படும் பொழுது அவர்களுடைய சிந்தனைகளை மறு ஒலிபரப்பு செய்யும் மகத்தான பணியையும் வானொலி செய்து வருகின்றது.

**வானொலியின் பணியும் நோக்கமும்**

மக்களுக்குத் தகவல் தரும் பொறுப்பை வானொலி மூன்று பெரும் நோக்கங்களாகக் கொண்டு பணியாற்றி வருகின்றது.

- கற்பித்தல்
- தகவல் அறிவித்தல்
- மகிழ்ச்சியூட்டல்

இந்த மூன்றையும் தனித்தன்மைகளாகவும் சுட்டலாம்.

Scanned by CamScanner

**வானொலியின் தனித்தன்மைகள்**

வானொலி செவிக்கு மட்டும் உரிய சாதனம். ஒலி வழியாக நிகழ்ச்சிகளைக் கேட்பவரின் சிந்தனையையும், கற்பனையையும் தூண்டி உள்ளத்தில் ஒரு சிறந்த சித்திரத்தைப் பதிவு செய்யும் ஆற்றல் பெற்றது. வேறு ஒரு வேலையைச் செய்து கொண்டே வானொலி தரும் தகவல்களைக் கேட்கலாம். மற்ற சாதனங்களை இவ்வகையில் பயன் படுத்த இயலாது. மக்களை விரைவாகச் சென்று சேரக்கூடியது.

வானொலி எல்லா மக்களும் பயன்படுத்தக்கூடிய சாதனமாக விளங்குகிறது. நாட்டின் ஒலிக்களஞ்சியமாகத் திகழ்கிறது. செவிச் செல்வத்தைத் தருகின்ற ஊடகமாக இருக்கின்றது. வானொலியின் பயன்பாட்டையும் நோக்கையும் விரிவுபடுத்தும் பிரச்சார்பாரதி என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. தொடர்பியல் துறையில் வானொலியின் வருகை ஒருவரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.

## 16. தொலைக்காட்சி

சின்னத்திரை என அழைக்கப்பெறும் தொலைக்காட்சியின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. மக்களின் விருப்பத்தையும், அவர்களின் தொடர்பியல் தேவைகளையும் நிறைவு செய்யும் சாதனமாகத் திகழ்கிறது. தனியார் தொலைக்காட்சிகளின் வருகையும், நிகழ்ச்சி ஒளிபரப்புகளும் இன்றைய சமுதாயத்தை நேரடியாகப் பாதித்து விளைவை ஏற்படுத்தி வருகின்றன.

**தொலைக்காட்சியின் தோற்றம்**

தொலைக்காட்சியின் வருகை பல சோதனைகளுக்குப்பின்னால் சாத்தியமாகி இருக்கிறது. ஸ்காட்லாந்து நாட்டைச் சார்ந்த ஜான்லகி பெயர்டு என்பவரே 1925ம் ஆண்டு தொலைக்காட்சி கண்டுபிடிப்பில் முழுக்கவனம் செலுத்தினார். பல சோதனைகளுக்கும் இடைவிடா முயற்சிக்கும் பின்னர் 1926ஆம் ஆண்டு தான் கண்டுபிடித்த கருவியை மற்றவர்களுக்கு இயக்கிக் காட்டினார்.

1928ஆம் ஆண்டு பி.பி.சி. எனும் பிரிட்டிஷ் வானொலி நிலையம் சோதனை முறையில் தொலைக்காட்சியைத் தொடங்கியது. அதன் பின்னர் பத்தாண்டுகளுக்குப் பின்னரே வணிகமுறையில் தொலைக்காட்சி தொடங்கப்பட்டது.

Scanned by CamScanner

## இந்தியாவில் தொலைக்காட்சி

தொலைக்காட்சியின் பயன்பாட்டையும் ஆற்றலையும் உணர்ந்த நம் நாட்டினர் இச்சாதனத்தை விரும்பி வரவேற்றனர். 1959ஆம் ஆண்டு சோதனை முறையில் புதுடில்லியில் ஒரு நிலையத்தை அகில இந்திய வானொலி தொடங்கியது. 1961ஆம் ஆண்டு கல்வி ஒளிபரப்புத் தொடங்கத் திட்டமிடப்பட்டது. 1965ஆம் ஆண்டு டெல்லி தொலைக் காட்சி செயல்படத் தொடங்கியது. 1972இல் பம்பாயில் ஒரு நிலையமும் புனாவில் ஒரு துணை நிலையமும் தொடங்கப்பட்டன. 1975ஆம் ஆண்டு கல்கத்தா தொலைக்காட்சி நிலையம் உதயமானது. சென்னையில் இதே ஆண்டு சுதந்திரத் திருநாளன்று தொலைக்காட்சி ஆரம்பமாயிற்று. வர்த்தக ஒலிபரப்பு 1976 முதல் கொண்டு வரப்பட்டது. வானொலியின் ஓர் அங்கமாக விளங்கி வந்த தொலைக்காட்சி 1976முதல் தனியே இயங்கும் வண்ணம் இந்திய அரசால் பிரிக்கப்பட்டது. 'தூர்தர்சன்' எனும் புதுப்பெயர் சூட்டப்பெற்று நிலையங்கள் கேந்திரங்கள் என்ற பெயரால் அழைக்கப்படும் என ஆணை பிறப்பித்தது. செயற்கைகோள் வழி தொலைக்காட்சித் திட்டத்தை அமெரிக்காவின் ஏடிஎஸ்6 என்ற துணைக்கோளை ஓராண்டுக்கு ஒப்பந்தம் செய்து வாங்கி அதன்மூலம் நிகழ்ச்சிகளை நிகழ்த்திப் பார்த்தது. அமெரிக்காவின் செயற்கைகோள் ஆற்றிய ஒலிபரப்புப் பணியை, தரையில் சில ஒளி பரப்பு நிலை யங்களை அமைப்பதன் மூலம் நிறைவு செய்யலாம் என்ற முயற்சியில் முனைப்போடு செயல்பட்டு நிலையங்கள் அமைத்தனர். இன்று நூற்றுக்கும் மேலான குறைந்த சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## தொலைக்காட்சியின் நோக்கம்

மக்கள் மத்தியில் கல்வியறிவு பரப்பவும், வேளாண்மை முறைகளில் புதிய அறிவினைப் பெருக்கவும், உடல்நலம், குடும்ப நலம் ஆகியவற்றை கற்பிக்கவும், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும் இந்திய அரசு தொலைக்காட்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

## தொலைக்காட்சி ஒளிபரப்பு வகைகள்

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பல வகை யினவாக அமைந்துள்ளன.

- செய்தி
- கல்வி
- நாடகம்
- தொடர்

Scanned by CamScanner

- திரைப்படம்
- உழைப்பாளர் நிகழ்ச்சி
- நேர்காணல்
- சிறப்பு நிகழ்ச்சிகள்
- மகளிர் நிகழ்ச்சி
- இசை
- அறிவியல்
- விளம்பரம்
- பட்டிமன்றம்
- சோதிடம்
- வேளாண்மை நிகழ்ச்சி
- விளையாட்டு
- கவியரங்கம்
- நூல் அறிமுகம்
- குழந்தைக்குரியன
- கிராமியக் கலைகள்
- அறிவிப்புகள்
- மருத்துவம்
- வழக்காடு மன்றம்
- வினாடிவினா

போன்ற நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. இவற்றுள் மிகுதியான மக்களைச் சென்றடையும் நிகழ்ச்சிகளாக அமைவன செய்தி, நாடகம், தொடர், திரைப்படப்பாடல், விளையாட்டு போன்றவையாகும்.

**நிகழ்ச்சிகளின் வழி தமிழ்ப்பணி**

மேற்குறித்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுள் தமிழ் இலக்கியம், பண்பாடு, கலை போன்றவற்றைப் பதிவு செய்யும் நிகழ்ச்சிகளும் உண்டு. அவற்றுள் நாடகம், நேர்காணல், கவியரங்கம்,கிராமியக்கலைகள், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சிறப்பு நிகழ்ச்சிகள் போன்றவை குறிப்பிடத்தக்கன. நாடகங்கள் சமூகம், வரலாறு, இலக்கியம், துப்பறிவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. கிராமியக் கலைகளின் பதிவுகள் அடிக்கடி ஒளிபரப்பாவதில்லை என்றாலும் தொலைக்காட்சியின் வழி கிராமிய கலைகளைப் பற்றிய அறிமுகத்தை மக்கள் பெறுகிறார்கள். இலக்கியம், அரசியல், திரைப்படம், அறிவியல் போன்ற துறைகளில் தனித்துவம் பெற்றுள்ள அறிஞர்களை நேர்காணல் செய்து அவர்களுடைய சிந்தனையை மக்களுக்கு வழங்கி வருகின்றது. கவியரங்குகளை அவ்வப்பொழுது நினைவுபடுத்தி வருகிறது. பொங்கல், தீபாவளி, புத்தாண்டு போன்ற சிறப்பு தினங்களில் இலக்கியப் பட்டிமன்றங்களையும், சமுதாய நோக்குடைய பட்டிமன்றங்களையும் வழக்காடு மன்றங்களையும் ஒளிபரப்பி வருகின்றது. தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் தமிழ் என்ற நோக்கோடு அணுகினால் திரைப்படத்திற்கும், பாடல்களுக்கும் தரப்படுகின்ற முதன்மையைவிடப் பிறவற்றில் மிகக் குறைவு எனலாம். தொலைக்காட்சி

Scanned by CamScanner

வழி ஒளிபரப்பான இராமாயணமும், மகாபாரதமும், சிலப்பதிகாரமும் சிறப்பாகத் கூறத்தக்கன.

## தொலைக்காட்சியின் தனித்தன்மைகள்

சமூகவியல் நோக்கில் கல்விக்கும் பிரச்சாரத்திற்கும் ஆற்றல் மிக்க சாதனம் தொலைக் காட்சி எனலாம். வானொலி, திரைப்படம், பத்திரிகை ஆகிய தொடர்பியல் சாதனங்கள் அனைத்தும் சேர்ந்து ஏற்படுத்தும் விளைவைத் தொலைக்காட்சி தனியே நின்று விளைவிக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதழ்களில் படித்துத் தெரிந்து கொள்வதற்குப் பதில் நிகழ்ச்சிகளைப் படங்களோடு செய்தியாளர் சொல்லும் தகவல்களைத் தரும் தொலைக்காட்சி கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் உரிய மகத்தான சாதனம். தொலைக்காட்சியின் தனித் தன்மைகளாக,

- உடனடித் தன்மை (Immediacy)
- நெருங்கிய உறவுத்தன்மை (Intimacy)
- உண்மைத் தன்மை (Actuality)

ஆகியவற்றை குறிப்பிடலாம்

தனியார் தொலைக்காட்சிகள் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட தனியார் தொலைக்காட்சிகள் இந்தியாவில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்து வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தனியார் தொலைக்காட்சிகளில் குறிப்பிடத் தகுந்தனவாக விளங்குவன சன், ஜெயா, விஜய், ராஜ் ஆகிய தொலைக்காட்சிகளாகும். கடுமையான போட்டிகளுக்கிடையே நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப முனைகின்றன. மக்கள் பல்சுவை நிகழ்ச்சிகளைக் கண்டு பயன் பெற்று மகிழ்கிறார்கள். இவை தவிர Star Plus Movies, Discovery, Zee, M.TV., T.N.T., E.S.P.N. Sony போன்ற பெயர்களில் தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் ஒளி பரப்பப்பட்டு வருகின்றன. நிகழ்ச்சிகளைத் தரும் முறையில் ஒவ்வொரு தொலைக் காட்சியும் வேறுபட்டு அமைகின்றன.

தனியார் தொலைக்காட்சியில் தமிழ் - ஒரு நாட்டின் மண்ணையும் மனிதனையும், மொழியையும், இலக்கியத்தையும், கலாச்சாரத்தையும், பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு தொலைக்காட்சிகளுக்கு உண்டு. ஆனால் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் தனியார் தொலைகாட்சிகள் தமிழ் மொழியின் இலக்கியத்தின் வளர்ச்சிக்குச் செய்து வரும் பணி மிகமிகக்குறைவு. திரைப்படங்களும், திரைப்படப் பாடல்களும் பெரும்

Scanned by CamScanner

பங்கு வகிக்கின்றன. ஆடை குறைப்பும் ஆபாசமும் விஞ்சி நிற்கின்றன. இதனால் பண்பாட்டுச் சீரழிவு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

## சில ஆலோசனைகள்

தொலைக்காட்சியின் வழி தமிழுக்கு எவ்வாறு ஏற்றம் தர முடியும் என எண்ணும் பொழுது சில ஆலோசனைகளை முன் வைக்கலாம்.

- தினந்தோறும் திரையிசைப் பாடல்களுக்கு ஒதுக்கப்படும் நேரத்தைப் போல் தமிழுக்கு ஒதுக்குதல்.
- சிறந்த படைப்பாளர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் முயற்சி.
- புதிய நூல்களைப் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதுடன் விமர்சனம் தந்து திறனாய்வது.
- இலக்கிய வட்டம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்திக் கருத்து மோதல்களை ஏற்படுத்தி, சிந்தனைகளை வெளிப்படுத்துவது.
- உலக-தரமான இலக்கியங்களையும், இலக்கியப் போக்குகளை யும் இனங்கண்டு அறிந்தவர்களின் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வது.
- படைப்பிலக்கியத் துறையில் சாதனை படைக்க ஒருவன் மேற் கொள்ள வேண்டிய அணுகுமுறைகளைத் தகுதி வாய்ந்தவர் களைக் கொண்டு விளக்குவது.

தமிழுக்கு தனியார் தொலைக்காட்சிகளின் பங்களிப்பு மேற்கூறப் பெற்ற களங்களில் அமையுமானால் தமிழின் வளர்ச்சி இன்னும் வேகமாக சிறக்கும்.

## தொலைக்காட்சியில் தடம் பதித்தவர்கள்

தொலைக்காட்சியில் பணியாற்றியதோடு இத்துறையின் நுட்பங்களையும் செயல்முறைகளையும் விளக்கி எழுதியவர்களுள் வெ.நல்லதம்பி, எம்.எஸ்.பெருமாள், தஞ்சை வாணன் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

வெ.நல்லதம்பி சென்னைத் தொலைக்காட்சியில் நாடக ஆசிரியராகப் பணியாற்றியவர். தயாரிப்பாளராகத் திகழ்ந்தவர். அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் தொலைக்காட்சி நுட்பக்கல்வி கற்றவர் அதனடிப் படையில் டி.வி. நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது எப்படி? தொலைக் காட்சியும் பிற தகவல் துறைகளும் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.

Scanned by CamScanner

எம்.எஸ்.பெருமாள் சென்னை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பணியாற்றியவர். நாடகப் போட்டிகள் பலவற்றில் பங்கு கொண்டு பரிசுகள் பெற்றவர். 'மானம் பொதுச் சொத்து', 'யாரைக் கேட்டு வந்தாய்' முதலான நூல்களைப் படைத்துப் படைப்பிலக்கியத் துறையிலும் சுவடுகள் பதித்தவர்.

தஞ்சை வானன் தொலைக்காட்சியில் சிறப்பாகப் பணியாற்றியவர். தொலைக்காட்சி நாடகங்கள் பலவற்றைத் தந்தவர். தமிழ் நிகழ்ச்சிகளை ஆர்வமுடன் தொலைக்காட்சியில் தந்த சிறந்த கவிஞர்.

மக்கள் மிகுதியாகப் பயன்படுத்தும் சாதனமாக விளங்குவது தொலைக்காட்சி. குறிப்பாகத் தனியார் தொலைக்காட்சிகளின் வருகை பெரு விளைவையும், பாதிப்பையும் ஏற்படுத்தி வருகின்றது.

விளைவும் பாதிப்பும் மனிதனைப் பண்படுத்தும் நிலையில் அமையுமாயின் அது பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும். ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான மக்களைச் சென்றடையக்கூடிய சாதனமாக விளங்குவதால் இதன் வழித் தமிழ் வளர்ச்சியை எளிமையாகவும் சிறப்பாகவும் செய்ய இயலும்.

தொலைக்காட்சிகள் முழு வேகத்தோடும், பொறுப்போடும் இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

## 17. திரைப்படம்

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய தொடர்பியல் சாதனங்கள் மக்களை நாடிச் செல்கின்றன. ஆனால் மக்கள் தாமே நாடிவரும் சாதனமாக விளங்குவது திரைப்படமாகும். திரைப்படத்தின் கவர்ச்சியும், கற்பனை நயமும், உத்திமுறைகளும், மக்களைக் கவரும் காரணிகளாக அமைகின்றன. சமுதாயத்தில் மற்ற தொடர்பியல் சாதனங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை விடத் திரைப்படம் ஏற்படுத்தும் விளைவுகள் மிக அதிகம் எனலாம். ஒப்பற்ற மிகச்சிறந்த ஆற்றல் வாய்ந்த சாதனமாக விளங்குகிறது.

### திரைப்படம் – ஒரு பார்வை

'கினி' என்ற லத்தீன் சொல் உணர்த்துவது அசைவு என்பதாகும். அசைவு இல்லாத படத்தைத் திரையில் அசையச் செய்யும் நிலை ஏற்பட்டபோது அதற்கு 'சினிமா' என்று பெயரிட்டார்கள். அந்த லத்தீன் சொல் மருவிப் பின்னாளில் சினிமா என்று மாறியது. திரைப்படத்தின்

Scanned by CamScanner

முன்னோடி நிழற்படமாகும். பல்வேறு சோதனைகளுக்குப் பிறகே திரைப்படம் உண்மையான முழுவளர்ச்சியைப் பெற்றது 1895ஆம் ஆண்டு லூமியர் சகோதரர்கள் திரையிட்டுக் காட்டிய ஒரு நிமிடப் படங்கள் திரைப்படத் துறையில் குறிப்பிடத் தகுந்தன. திரைப்படத்தைக் கலைவடிவம் என்ற நிலைக்கு உயர்த்திய புகழுக்குரியவர் டி.டபுள்யூ கிரிபிஃத் என்பவர். 1915இல் இவர் இயற்றிய 'தி பர்த் ஆஃப் எ நேஷன்' என்ற படம் திரைப்பட வரலாற்றில் பெரும் சாதனையாகக் கருதப் படுகிறது. பேசும் படங்கள் வெளிவந்த ஆண்டு 1927ஆகும்.

### இந்தியாவில் திரைப்படம்

உலகில் அதிக எண்ணிக்கையிலான திரைப்படங்கள் உருவாகும் நாடு இந்தியா. லூமியர் சகோதரர்கள் 1896ஆம் ஆண்டு பம்பாய் வாட்சன் உணவகத்தில் சில துண்டுப்படங்களைக் காட்டினர். திரையரங்கு தேவை என்பதை உணர்ந்த ஜெ.ஃப் மதன் என்பவர் 1907ஆம் ஆண்டு கல்கத்தாவில் இந்தியாவில் முதல் திரையரங்கமான எல்பின்ஸ்டன் திரையரங்கைக் கட்டினார். இந்தியத் திரைப்படக் கலையின் தந்தை என்ற சிறப்புக்குரியவர். டி.ஜே.பால்கே என்னும் அறிஞர் ஆவார். ராஜா ஹரிச்சந்திரா எனும் முழுநீளப் படத்தைத் தயாரித்து அளித்தார். இந்தியாவில் தயாரான முதல் இந்தியப் படமான 'ஆலம் ஆரா' என்னும் படத்தை அர்தீசிர் இரானி என்பவர் இயக்கினார். இந்தியாவிலேயே அதிகப்பிரதிகள் எடுக்கப்பட்ட படமான சந்திரலேகா என்ற படத்தை எஸ்.எஸ்.வாசன் எடுத்து வரலாறு படைத்தார்.1954இல் வெளியான பீமல்ராய் இயக்கிய 'தோபிகா ஜமீன்' என்ற படமும், 1955இல் வெளியான சத்தியசித்ரே இயக்கிய 'பதேர் பாஞ்சாலி' என்ற படமும் குறிப்பிடத்தக்கன.

### தமிழகத்தில் திரைப்படம்

1897இல் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் எட்வர்ட் என்பவர் படங்களைத் திரையிட்டார். 1900இல் மேஜர் வார்விக் என்பவர் எலக்ட்ரிக் தியேட்டர் என்ற முதல் திரையரங்கை அமைத்துத் திரைப்படங்களை இயக்கினார்.

அதன்பின்னர் பலர் முனைப்புடன் திரைப்படத் துறையில் கவனம் செலுத்தித் தமிழ்த் திரைப்படத் துறையை வளர்த்தனர். தென்னகத்தின் முதல் திரைப்படமான 'கீசகவதம்' என்ற படத்தை நடராஜ முதலியார் 1916இல் வெளியிட்டார். முழுநேரத் தொழிலாகத் திரைப்படத் துறையைத் தேர்வு செய்து வெற்றி பெற்றவர்கள் பலர். தமிழில் பேசும்

Scanned by CamScanner

படமான 'காளிதாஸ்' 1931இல் எச்.எம்.ரெட்டி என்பவரால் மக்களுக்குத் திரையிடப்பட்டது. தமிழ்ப்பட உலகில் பேசும்படத் தந்தை என்று புகழப் படுபவர் கே.சுப்பிரமணியம். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளைத் துணிவோடு கூறியவர். தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையைத் தோற்றுவித்தவர்.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் புதுமைகள் பல செய்தவர் டி.ஆர்.சுந்தரம். மாடர்ன் தியேட்டர்ஸ் என்ற நிறுவனத்தின் வாயிலாகத் தரமான திரைப்படங்களைத் தந்தவர். தமிழகத்தின் முதல் வண்ணப் படமான 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற திரைப்படத்தை 1955இல் வெளியிட்டார். ஆங்கிலப் படங்களுக்கு இணையாகப் படமெடுக்க முடியும் என மெய்ப்பித்துக் காட்டியவர் எஸ்.எஸ்.வாசன். 1940இல் மூவிலெண்ட் ஜெமினி ஸ்டூடியோவை நிறுவி 'சந்திரலேகா' எனும் பிரம்மாண்டமானதிரைப்படத்தைத்தயாரித்தார். ஏ.வி.மெய்யப்பச் செட்டியாரின் பங்களிப்பும் சிறப்பாகக் கூறத் தக்கது.

### திரைக்கலைப் பயிற்சி நிறுவனம்

இந்தியத் திரைப்படத் துறையை ஆராய்ந்த ரெங்காச்சாரி தலைமையில் அமைக்கப்பட்ட குழு 1927ஆம் ஆண்டு திரைக்கலைப் பயிற்சி நிறுவனம் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது. 1946இல் இக்கோரிக்கை நிறைவேறியது. அதனடிப்படையில் தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி தோன்றியது. இக்கல்லூரியில் பயின்றவர்கள் பலர் தொலைக்காட்சியிலும் திரைப்படத்திலும் முத்திரைபதித்து வரு கின்றனர். சிறந்த திரைப்படங்களையும் தந்து வருகின்றனர்.

### திரைப்படம் வளர்த்த கவிதையும் வசனமும்

திரைப்படத்தின் வாயிலாகச் சிறந்த கவிதைகளும் செறிவான வசனமும் செழித்து வளர்ந்தன. பாபநாசம் சிவன், உடுமலை நாராயணகவி, தஞ்சை ராமையாதாஸ், கலைவாணர், மருதகாசி, சுரதா, பட்டுக்கோட்டை, பாரதிதாசன், ஆலங்குடி சோமு, கண்ணதாசன், வாலி, புலமைப்பித்தன், ஈரோடு தமிழன்பன், வைரமுத்து, மேத்தா, இளையராஜா போன்றோர் திரைப்படங்களின் வழி தமிழ்க்கவிதைகளை வளர்த்தனர், வளர்த்து வருகின்றனர். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.கே. தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா, எம்.ஆர்.ராதா, சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர். முதலானோர் தங்களுடைய எழுத்தாலும் பேச்சாலும் திரைப்படத்தில் தமிழ் வசனத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றனர்.

Scanned by CamScanner

## திரைப்படம் பற்றிய ஆய்வுகள்

திரைப்படம் ஏற்படுத்துகிற சமுதாயத் தாக்கத்தை மதிப்பிட்டுக் கருத்துக்களைப் பதிவு செய்யும் நோக்கில் பல ஆய்வுகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. அவற்றுள் சில ஆய்வுகளைச் சுட்டுதல் திரைப்படத் துறையில் தமிழ் பெறுமிடத்தை விளக்குவதாக அமையும்,

| | | |
|---|---|---|
| அரங்கவடிவேலன் | - | தமிழ்த்திரையிசைப் பாடல்கள் |
| க. கோவிந்தன் | - | இந்திய விடுதலைக்குப்பின் வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களில் காணப்படும் சமுதாயப் பிரச்சனைகள். |
| எம். துளசிமணி | - | தமிழ்த்திரையிசைப்பாடல்களில்இலக்கியக் கூறுகள். |
| ஏ.எஸ். பிரகாசம் | - | தமிழ்த் திரைப்படங்களின் போக்கு ஓர் ஆய்வு. |
| அரசுமணிமேகலை | - | பாரதிராஜாவின் திரைப்படங்களில் உரையாடல்கள் |
| இரா.இரகுபதி | - | பாரதிராஜாவின் திரைப்படங்களில் கருத்துப் புலப்பாட்டு நெறி. |

போன்ற களங்களில் திரைப்படங்களையும், பாடல்களையும் ஆய்வு செய்து முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளனர்.

## திரைத்தமிழ் தந்த அறிஞர்கள்

திரைத்தமிழ் தந்த அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, என்.எஸ்.கிருஷ்ணன், அறந்தை நாராயணன் முதலானோரின் பணி சிறப்பிற்குரியது.

அறிஞர் அண்ணா மக்களைச் சுண்டி இழுக்கும் சமுதாயக் கருத்துக்களை அடுக்கு மொழியில் சொன்னவர். ஓர் இரவு, வேலைக்காரி, சொர்க்கவாசல், இரங்கோன் ராதா, வண்டிக்காரன் மகன் போன்ற இவருடைய இலக்கியங்கள்திரைப்படங்களாக ஏற்றம் பெற்று விளங்கின.

கலைஞர் கருணாநிதி இராஜகுமாரி, மந்திரிகுமாரி, பராசக்தி, முதலிய திரைப்படங்களின் வாயிலாகத் திரைத்தமிழில் உரையாடல் புதுமை செய்து கலைஞர் என்ற பட்டத்தைப் பெற்றார். இன்றும் திரைத்தமிழ்ப் பணியாற்றி வருகின்ற கலைஞராகத் திகழ்கின்றார்.

என்.எஸ்.கிருஷ்ணன் கலைவாணர் என மக்களால் பாராட்டப் பெற்றவர். மக்களைச் சிரிக்க வைக்க நகைச்சுவையோடு பகுத்தறிவுக் கருத்துக்களையும் பரப்பியவர்.

Scanned by CamScanner

அறந்தை நாராயணன் நாடகங்கள் பலவற்றைத் தந்தவர். தமிழ்த் திரைப்பட வரலாற்றைத் தொகுத்துத் தமிழ் சினிமாவின் கதை என்ற நூலாகத் தந்த சிறப்பிற்குரியவர். நட்சத்திரத் தேடல் என்பது திரைத் தமிழுக்கு இவர் தந்த மற்றொரு நூலாகும்.

### திரைப்படமான படைப்பிலக்கியங்கள்

கல்கியின் பார்த்திபன் கனவு, ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான், சிலநேரங்களில் சிலமனிதர்கள், கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோகனாம்பாள், தி.ஜானகிராமனின் மோகமுள் முதலியன நாவல்களாக இருந்து திரைவடிவம் பெற்ற சிலவாகும்.

குருதிப்புனல் என்றதும் மக்களுக்குக் கமலஹாசன் தான் நினைவுக்கு வருகிறாரே தவிர இந்தப் பெயரில் படைப்பிலக்கியம் தந்த இந்திரா பார்த்தசாரதி நினைவுக்கு வருவதில்லை. அந்த அளவிற்குத் திரைப்படம் சமுதாய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய தமிழ்த் திரைப்படங்களில் உரையாடலும், பாடல்களும் போற்றத்தக்க வகையில் அமையவில்லை. இப்போக்கு மாறவேண்டும். திரைப்படங்களின் வழி நல்ல தமிழை மேம்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும்.

## 17. சொல்லத்தகுந்த சில துறைகள்

தமிழின் வளர்ச்சிக்கேற்ப புதிய துறைகளின் வருகையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. நடையியல், பதிப்புத்தமிழ், ஆட்சி மொழித்தமிழ், அரசியல் தமிழ், பொருளியல் தமிழ், நூலகத் தமிழ், சட்டத்தமிழ், மேடைத்தமிழ் முதலிய தனித்தனி துறைகளாக ஏற்றம் பெற்று விளங்குகின்றன.

ஒவ்வொரு துறையிலும் தமிழ் பயன்பாட்டிற்கேற்ப கலைச் சொல்லாக்கப்பணி நிகழ்த்தப்பட்டு வருகின்றது. தமிழ்வளர்ச்சிக்கழகம், தமிழ் வளர்ச்சித்துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்ற அமைப்புகள் தமிழ் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றி வருகின்றன. பல்கலைக் கழகக் கல்லூரிகளில் நிகழ்த்தப்பெறும் ஆய்வுகளும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் மேற்சுட்டிய துறைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து அளிப்பது அவசியமான ஒன்றாகும். அப்பொழுதுதான் தமிழ் இலக்கிய வரலாறு குறித்த ஒரு முழுமையான பார்வையையும் போக்கையும் அறிந்து கொள்ள இயலும்.

Scanned by CamScanner